உதயன்
விலை ரூபா 10.00
www.uthayan.com
சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2038 கார்த்திகை 30 ஞாயிற்றுக்கிழமை (16.12.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 20

# க.கா. குழுவை சுருங்கச் செய்து போரை முன்னெடுக்கிறது அரசு

## இராணுவத்தின் மமதைக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என்கிறார் நடேசன்



கிளிநொச்சி,டிசெம்பர்16

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் செயற்பாட்டைக் சுருங்கச் செய்தும் அவர்களின் செயற்பாடுகளைத் தடுத்தும் அரசாங்கம் போரை முன்னெடுத்து வருகிறது.

ஸ்ரீலங்கா அரசாங்கம் போரின் மீது வெறிகொண்டுள்ளது. வன்னி மண்ணைக் கபளீகரம் செய்து தமிழின அழிப்பைப் பூர்த்திசெய்யலாம் எனக் கருதுகிறது.

இராணுவத்தின் இந்த மமதைக்கு தக்க பதிலடி கொடுப்போம்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன்.

'வெள்ளிநாதம்' வார இதழுக்கு அளித்த நீண்ட செவ்வி ஒன்றில் அவர் இவற்றைக் கூறியுள்ளார்.

செவ்வியின் சில பகுதிகள் வருமாறு:-

இரண்டு தரப்புகளுக்கிடையே செய்து கொள்ளப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தின் மூலமாக உருவாக்கப்பட்ட கண்காணிப்புக் குழுவை சிறிலங்கா அரசு அடக்கவும், அதட்டவும் முற்படுவதன் மூலம் அரசின் கீழ் இயங்கும் ஒரு பிரிவாகக் கண்காணிப்புக் குழுவைச் சிறுமைப்படுத்த முற்பட்டுள்ளது.

இதன் காரணமாக கண்காணிப்புக் குழுவினின் செயற்பாட்டைச் சுருங்கச் செய்தும் அவர்களின் செயற்பாட்டைத் தடுத்தும் அரசு யுத்தத்தை முன்னெடுத்து வருகின்றது.

இராணுவ உதவியினைப் பெறுவதிலும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## அனுராவின் பாதுகாப்பு வாபஸ்

கொழும்பு,டிசெ.16

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்த உல்லாசப்பயணத்துறை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்காவின் அமைச்சர்களுக்கான வசதிகள் மற்றும் பாதுகாப்பு வாபஸ் பெறப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

வரவு - செலவுதிட்டத்தின் மூன்றாவது வாசிப்பு விவாதத்தின் போது நாடாளுமன்றம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## விமானப் படையினர் இருவர் விபத்தில் பலி!

திருகோணமலை,டிசெ.16

திருகோணமலை மாவட்டத்தில் மொறவேவவில் நேற்றுக்காலை 8.30 மணிக்கு இடம்பெற்ற விபத்தில் 2 விமானப்படையினர் மரணமடைந்தனர்; 14 படையினர் காயமடைந்தனர்.

மொறவேவ - அனுராதபுரம் வீதியில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## அடம்பனில் மோதல்

கொழும்பு,டிசெ.16

மன்னார், அடம்பன் முன்னரங்க நிலைகளில் நேற்றுமுன்தினம் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல்கள் நடைபெற்றன.

வெள்ளிக்கிழமை மாலை 6.40 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய ஆட்லறி தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்; ஐந்து படையினர் காயமடைந்தனர்.

இராணுவத்தினரின் ஊடகத் தகவல் நிலையம் இத்தகவலை வெளியிட்டுள்ளது.

வன்னியில் பல்வேறு இடங்களில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல்களில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரவு - செலவுத் திட்டத்தில் கிடைத்த வெற்றி பயங்கரவாதத்தைத் தோற்கடிக்க உதவும்

### ஜனாதிபதி அறிக்கை

கொழும்பு,டிசெ.16

வரவு - செலவுத் திட்டத்தில் கிடைத்த வெற்றி பயங்கரவாதத்தைத் தோற்கடிக்க அரசுக்கு உதவியாக இருக்கும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இப்படிக் கூறியுள்ளார்.

வரவு செலவுத் திட்ட மூன்றாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பில் அரசு வெற்றி பெற்றமை தொடர்பாக அவர் விடுத்த விசேட செய்தி அறிக்கையிலேயே இப்படிக் கூறியுள்ளார்.

ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளதாவது-

திரைமறைவில் மேற்கொள்ளப்பட்ட பல சதித்திட்டங்களுக்கு மத்தியிலும் வரவு - செலவுத்திட்டத்துக்கு ஆதரவு வழங்கிய கட்சிகள், அரசாங்கத்தைப் பலப்படுத்தியுள்ளன. அதற்காக அவற்றைப் பாராட்டுகின்றேன்.

நாட்டில் உள்ள ஒவ்வொரு பிரசையும் மற்றவருடன் நல்லுறவோடு வாழக்கூடிய நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதே அரசின் நோக்கமாகும். இருந்த போதிலும் வரவு - செலவுத் திட்டத்தை தோற்கடிக்க சில கட்சிகள் பல்வேறு பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தன.



(12ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் போராட்டத்தின் முகம் 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம்

### நினைவு நிகழ்வில் அஞ்சலி

கிளிநொச்சி,டிசெ.16

'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம் எமது விடுதலைப் போராட்டத்தின் முகமாக விளங்கியவர். அதன் நியாயங்களை அனைத்துலகத்துக்கும் முன்வைத்தவர்.

இவ்வாறு கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற நினைவு நிகழ்வில் முக்கிய உரையாற்றிய க.வே.பாலகுமாரன் தெரிவித்தார்.

அவர் தமது பேச்சில் -

பாலா அண்ணா தனது சிந்தனையால் தமிழர்களுடைய விடுதலையின் அவசியத்தை வலியுறுத்தியவர்.

பாலா அண்ணாவின் மறைவு ஒரு முக்கிய காலகட்டத்தில் நிகழ்ந்துவிட்டது. அவரது நினைவுடன் எமது விடுதலைப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பூமி வெப்பமடைவதால் இலங்கைக்கு நேரடிப் பாதிப்பு

கொழும்பு,டிசெ.16

பூமி வெப்பமடைவதால் ஏற்படும் ஆபத்துக்களை இலங்கை வருங்காலத்தில் எதிர்கொள்ள நேரிடும் என்று நோபல் பரிசு பெற்ற புவியியல் விஞ்ஞானி கலாநிதி மொஹான் முனசிங்க தெரிவித்தார்.

பூமி வெப்பமடைவதன் காரணமாக அடுத்த இரண்டு தசாப்த காலப்பகுதிக்குள் இலங்கையில் நேரடித் தாக்கம் இருக்கும் -

நாட்டின் உலர் வலயங்களில் வரட்சி ஏற்படக்கூடிய அதேவேளை, விவசாயத்துக்கும் நேரடிப் பாதிப்பு ஏற்படும். அதே வேளை ஈரவலயப் பிரதேசங்களில் மழைவீழ்ச்சி மிக அதிகரித்து அதன் காரணமாக மண்சரிவு, வெள்ளம் போன்ற அனர்த்தங்கள் ஏற்படும் -

கடல் மட்டம் உயரும்போது இலங்கையில் அடிக்கடி சுனாமி உண்டாகும் சாத்தியங்கள் அதிகம் உண்டு - என்றும் அவர் கூறினார்.

(12ஆம் பக்கம் பார்க்க)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் ஜனநாயகப்படி தெரிவானவர்கள் அல்லர்

## புலி ஆதரவாளர்கள் என்கிறார் விமல் வீரவன்ஸ

கொழும்பு.டிசெ.16

பிரித்தானியத் தூதுவரின் உரையும், மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் நாடாளு மன்ற உறுப்பினர்களின் உறவினர்கள் கடத்தலும் வியாழக்கிழமையன்று நாடாளு மன்றத்தில் பெரும் சர்சையையும், சல சலப்பையும் ஏற்படுத்திவிட்டன.

வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம, பிரித்தானியத் தூதுவர் வெளியிட்ட கருத்துகளைக் கண்டித்தும் அதனை மறுத்தும் அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

தமிழ் மக்கள் தமக்கென தமிழ்த்தேசி யீம் தொடர்பாகப் பேசுவதில் நியாயம் உண்டு என்றும், புலிகளையும், அரசையும் இருதரப்பினர் என சமன்படுத்திக் கூறிய தையும் இலங்கை அரசு கண்டித்துள்ளது.

பிரித்தானியத் தூதுவர், வெளிவிவகார அமைச்சுக்கு அழைக்கப்பட்டு விளக்கம் கோரப்பட்டு, அவரது கூற்றைத் திருத்திக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது என்று கூறினார். ஆனால், ஜே.வி.பியினர் அதனை வன்மையாகக் கண்டித்தனர்.

பிரித்தானியத் தூதுவர் வெளிவிவகார அமைச்சுக்கு வந்து இரகசியமாக உங்களி டம் பேசினார் என்பதை உலகம் அறியாது. அதேவேளை, இலங்கையில் மனித உரிமை கள் மீறப்படுகின்றன. புலிகளின் தமிழ்த் தேசியம் நியாயமானது என்று அவர் கூறி யதை முழு உலகமும் அறியும்.

எனவே, பிரித்தானியத் தூதுவர் தான் தெரிவித்த கருத்தை பகிரங்கமாக வாபஸ் பெறவேண்டும். பிரித்தானிய அரசுக்கு அறிவித்து அவரை உடனடியாக இலங்கை யில் இருந்து திருப்பி அழைக்க வேண் டும்'' - என கேட்க வேண்டும் என்று விமல் வீரவன்ஸ கூறினார்.

அவரை நாம் திருப்பி அழைக்கும்படி கேட்க வேண்டிய அவசியம் இல்லை. அவரது பதவிக்காலம் முடிந்துவிட்டது. ஜனவரிமாதம் ஏழாம் திகதி நாட்டை விட்டு செல்லப்போகின்றார் - எனப் பதில் அளித்தார் வெளிவிவகார அமைச்சர்.

''ஜே.வி.பியினரும் வெளிவிவகார அமைச்சரும் பிரித்தானியத் தூதுவரின் கூற்றை கண்டிக்கின்றனர். அவர் எதையோ சொல்லக் கூடாததையும் இல்லாததையும் கூறிவிட்டதுபோல் துடிக்கின்றனர். இந்த நாட்டில் இடம்பெறும் உண்மைச் சம்பவங் களைத்தானே கூறினார். அதில் தவறில்லை'' என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் பல சம்பவங்களை உதாரணம் காட்டிப் பேசினர்.

இது ஜே.வி.பியினருக்கு எரிச்சலை மூட்டிவிட்டது.

ஜே.வி.பி. உறுப்பினரான விமல் வீர வன்ஸ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் ஜனநாயக முறைப்படி தெரிவு செய்யப்பட்டவர்கள் அல்லர். அவர் கள் புலிகளின் ஆலோசனையுடன் வந்த வர்கள் எனக் குறிப்பிட்டார்.

இதனைத் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு உறுப்பினர்கள் ஒட்டுமொத்தமாக ஆட்சேபித்து ஆரவாரம் செய்தனர். இத னால் சபையில் சில நிமிடங்கள் அமைதி யற்ற நிலை ஏற்பட்டது.

''இந்த நாடாளுமன்றத்திற்கு வந்துள்ள அனைத்து உறுப்பினர்களும் ஜனநாயக முறைப்படி வந்தவர்கள்தான். அனைவ ரும் கௌரவிக்கப்படவேண்டும்''- என சபாநாயகர் விமல் வீரவன்ஸவுக்குக் கூறி னார்.

ஜே.வி.பியினருக்கு சரித்திரமும் தெரி யாது. ஜனநாயகமும் தெரியாது. வடக்கு - கிழக்கு மக்களின் கடந்த 50 வருடகால அபிலாஷைகளும் உத்வேகமும்தான் எங் களை இந்தச் சபைக்குக் கொண்டு வந்துள்ளது. நாம் ஜனநாயக முறைப்படி இந்தச் சபைக்கு வந்தவர்கள் என்பதை ஜே.வி.பியினருக்கு தெளிவுபடுத்திக் கொள்கின்றேன் - என்றார் கூட்டணி உறுப்பினர் இரா. சம்பந்தன். (சி)

# கலாநிதி சிவயோகனுக்கு இளம் விஞ்ஞானி விருது

யாழ்ப்பாணம்,டிசெ.16

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப ஆணைக்குழு யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியல் துறைத் தலைவர் கலாநிதி நாகலிங்கம் சிவயோகனை சிறந்த இளம் விஞ்ஞானி விருது வழங்கிக் கௌரவித் துள்ளது.

விஞ்ஞானக் கல்வியை மாணவர்கள் மத்தியிலும் 'விஞ்ஞானத்தின் பயன்பாடு களை பொதுமக்களிடையேயும் பிரபல்யப் படுத்துவதில் அவர் ஆற்றிய பணிகளை மெச்சியே இந்த விருது வழங்கப்பட்டுள் ளது.

விஞ்ஞானம் சார் கட்டுரைகளை பத்தி ரிகைகள் சஞ்சிகைளில் எழுதியும் மாணவர் கள் மத்தியில் போட்டிகளை நடத்தியும் விஞ்ஞான அறிவை முன்னெடுத்துச் செல் வதில் அவர் ஆற்றிய பணிகளைப் பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை இலங்கை கைத்தொழில் மற்றும் தொழில் நுட்ப நிறுவனத்தில் - கொழும்பில் - நடை பெறும். விழாவில் கலாநிதி சிவயோகன் விருதினைப் பெற்றுக்கொள்வார். (அ)

# ஆயுள்காப்புறுதி நிறுவனத்தில் சாதனையாளர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்.டிசெ.16

ஆயுள் காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் யாழ். கிளையின் சாதனையாளர் விழா கடந்த 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள அதன் அலுவலகத்தில் நடைபெற்றது.

ஆயுள் காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் யாழ்.கிளை முகாமையாளர் வி.வித்தியா சங்கர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கைத் திருச்சபையின் யாழ்.குரு முதல்வர் வண. பிதா எஸ்.பி.நேசகுமார் கலந்துகொண்டு சாதனையாளர்களை கௌரவித்தார். ஆயுள் காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் சந்தைப் படுத்தல் முகாமையாளர் என்.சேகர் இந்த வைபவத்தில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

காப்புறுதித்துறையில் பல்வேறு சாத னைகளை நிகழ்த்திய ஆலோசகர்கள், முக வர்கள் ஆகியோர் இந்த வைபவத்தில் கௌர விக்கப்பட்டனர்.

பிரதம விருந்தினர் வண.பிதா எஸ். பி. நேசகுமார் தமதுரையில், யாழ்ப்பாணத் தில் ஓர் இக்கட்டான சூழ்நிலை நிலவி வருகின்ற போதிலும் ஆயுள் காப்புறுதி கூட் டுத்தாபனம் யாழ். மக்களுக்கு மிகவும் திருப்திகரமான முறையில் சேவையை வழங்கி வருகின்றமை பாராட்டுக்குரியது - என்றார்.

(50)

# தென்மராட்சி பாடசாலைகளுக்கிடையில் நாளை தொடக்கம் தமிழ்த்தினப் போட்டி

யாழ்ப்பாணம்.டிசெ.16

தென்மராட்சி கல்வி வலய பாடசாலை மாணவர்களுக்கிடையிலான தமிழ்மொழிப் போட்டிகள் எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்ப மாகித் தொடர்ந்து நான்கு நாள்கள் சாவகச் சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள் ளன.

எதிர்வரும் 21ஆம் திகதி ஆக்கம், கட்டுரை, இலக்கியம் நயத்தல் தமிழியல் கட்டுரை வரைதல், இலக்கணம், திறனாய்வு, குறுநாடக ஆக்கம், கவிதை ஆக்கம், சிறு கதை ஆக்கம் ஆகிய எழுத்துப் போட்டி களும் -

22ஆம் திகதி கட்டுரை மதிப்பீ டும் -

23ஆம் திகதி வாசிப்பு, ஆக்கத் திறன் வெளிப் பாடு, கதை கூறல், பேச்சு, பாவோதல் இசையும் அசைவும், இசை (தனி), நடனம்(தனி), வில்லுப்பாட்டு, விவாதம், தமிழறிவு வினா விடை ஆகிய போட்டிகளும் -

24ஆம் திகதி இசை(குழு), நடனம் (குழு), நாட்டிய நாடகம்(குழு),நாடகம் ஆகிய போட்டிகளும் நடைபெறும்.

போட்டிகளில் நடுவராக பணியாற்ற வுள்ள ஆசிரியர்களை குறித்த நேரத்திற்கு முன்பாக மண்டபத்திற்கு வருகை தரு மாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (203)

இதோ,

இளமைத் துடிப்புமிக்க முழுமையான, திருப்திகரமான, பாலியல் இன்பத்தைப் பெற்று, உங்கள் உடலில் ஜீவசக்தியைப் பெருகச் செய்து, பூரிக்கச் செய்வதற்கும் விரயமாகும் உங்கள் சக்தியை விரைவில் புன ரமைப்பதற்கும் நரம்புத்தளர்ச்சி, மூட்டுவலி, கடுப்பு நோவு ஆகியவற்றை நீக்கி உடலுக்கு உயிர் துடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் பெறு வதற்கும் பாவியுங்கள்!

100% இளமையையும் வலிமையையும் தரும்

சித்தாரா முடக்கத்தான் அமுக்கரா சிரப்

யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:-
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:- 6382) AR/PR/No. 228
(சி/54611)

சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(குறிப்பு: சத்திரச்சந்திக்கு அண்மையில்)

# மரண அறிவித்தல்கள்

## சின்னையா திருநாவுக்கரசு

(சாத்திரியார், தேவிகோயிலடி)

எழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் பதிவாளர் ஒழுங்கை, தலங்காவல்பிள்ளையார் கோயிலடி, திருநெல்வேலியைப் வசிப்பிடமாகக் கொண்ட சின்னையா திருநாவுக்கரசு நேற்று (15.12.2007) சனிக்கிழமை காலமனார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - நல்ல பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தில்லைநாதன்(பண்ணாகம்), மீனாம்பிகை(ஏழாலை), தங்கரத் தினம் (ஏழாலை), செல்லம்மா(ஏழாலை) மற்றும் சிவஞானசுந் தரம்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(16.12.2007) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல் வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பதிவாளர் ஒழுங்கை,*
*தலங்காவல்பிள்ளையார் கோயிலடி,*
*திருநெல்வேலி.*

தகவல்:
அட்சரேஸ்வரி
(பெறாமகள்)

## சேனாதிராசா இந்துநாதன்



யாழ்ப்பாணம், கந்தர்மடத்தைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சேனாதி ராசா இந்துநாதன் 14.12.2007 வெள்ளிக் கிழமை காலமனார்.

அன்னார் துரைச்சாமி சேனாதிராசா (அன் சன் உரிமையாளர்) - சரஸ்வதி தம்பதியரின் அன்புமகனும் லோகநாதன்(பிரான்ஸ்), கம லேஸ்வரி, காலஞ்சென்ற கிருபாகரன், வேலும் மயிலும், சாவித்திரி, தமயந்தி (கனடா), மோகனதாஸ் ஆகியோ ரின் அன்புச் சகோதரனும் கோமேஸ்வரி (பிரான்ஸ்),சபேசன் (சட்டத்தரணி), செபஸ்ரியன்(கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2007) ஞாயிற் றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அரசடி வீதி,*
*கந்தர்மடம்.*

தகவல்:
குடும்பத்தினர்.

(69057)

# உடுவில் பிரதேச சபையின் பாராட்டு விழா நாளை

யாழ்ப்பாணம்,டிசெ.16

யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங் களுக்கு இடையே நடைபெற்ற முகாமைத் துவப் போட்டியில் உடுவில் பிரதேச சபை இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண் டது.

இதனைப் பாராட்டும் விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடை பெறவுள்ளது.

சுன்னாகம் பொதுநூலக மண்டபத் தில், சுன்னாகம் ப.நோ.கூ.சங்கத் தலைவர் சி. குமாரவேல் தலைமையில் நடைபெற வுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தின ராக அரச அதிபர் கே.கணேஷ் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக ஜனாதிபதி சட்டத்தரணி செல்வி சாந்தா அபிமன்னசிங்கம், யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ வணிக பீடாதிபதி க.தேவ ராசா, வலி.தெற்குப் பிரதேச சபைச் செய லாளர் திருமதி சரஸ்வதி சொக்கலிங்கம் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

(50-86)

# அரங்க செயற்பாட்டு செயலமர்வு

யாழ்ப்பாணம்,டிசெ.16

தென்மரட்சி கல்வி வலயப் பாட சாலைகளின் ஆரம்பப்பிரிவு ஆசிரியர் களுக்கான அரங்க செயற்பாட்டு செயல மர்வு நாளையும் மறுதினமும் நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

செயலமர்வுக்கு வலயப் பாடசாலை களில் இருந்து 60 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும், செயலமர்வில் பங்குபெற்றுவதற்கான கடிதத்தினை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறும் வலயக் கல்விப் பணிப்பாள ர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள் ளார். (207-1)

# கண்ணீர் அஞ்சலி

எமது மன்ற நிர்வாக சபை உறுப்பினரான சபாரத்தினம் இராசநாயகம் அவர்களின் பாசமிகு சகோதரரான

## சபாரத்தினம் கனகசபாபதி

(குட்டி வாத்தியார்) (கிராம அலுவலர் J/42, காரைநகர்)

அவர்களது மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மாசாந்தியடைய எல்லாம் வல்ல ஈழத்து சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேசப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாக சபையினர்,
ஆசிரியர், மாணவர்கள்,
கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்.

(68994)

# மரண அறிவித்தல்

## தியாகராசா பரமநாதன்



(முன்னாள் சாவ/ப.நோ.கூ.சங்க முகாமையாளர்)

மீசாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட தியாகராசா பரமநாதன் 13.12.2007 வியாழக்கி ழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராசா-செல் லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்ற சின்னத்துரை - சின்னத்தங்கம் தம்பதிய ரின் அன்பு மருமகனும் தனலட்சுமியின் (கனடா) அன்புக் கணவரும் சிவகரனின் (கனடா) பாசமிகு தந்தையும் கருணாதேவி (கனடா), கமலேஸ்வரி, பத்மநாதன் (கனடா), மகேஸ்வரன் (அமெரிக்கா), கமலராணி (மீசாலை), கமலாம்பிகை, கலாநிதி, கணேஸ்வரன் (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோ தரனும் மகேந்திரநாதன், இராமநாதன், பவளராணி, மனோகரி, யோக நாதன், மகாலிங்கம், காலஞ்சென்ற குமரகுலம், மீனலோஜினி, முருகையா (கொழும்பு), இரத்தினேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற இரத்தினசிங்கம், தவமணி (கொழும்பு), பரமேஸ்வரி (திருகோண மலை), செல்வராஜா(மீசாலை) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2007) ஞாயிற் றுக்கிழமை கனடா, ரொறன்ரோவில் நடைபெறும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள் ளவும்.

*கனடா T.P:0016476685005*

தகவல்:
செல்வராஜா,
யோகநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒடுக்குமுறைக்குப் பதில் விடுதலையே; சர்வதேசப் பாதையின்றி அது சாத்தியமில்லை

"பிரிவினைவாதம்" என்னும் அரசியற்பதமானது தமது உரிமைக்காக போராடும் மக்களின் உரிமையைக் கொச்சைப்படுத்தும் பதமாக மட்டுமின்றி இனஒடுக்குமுறை வாதத்தை ஆதரிக்கும் பதப் பிரயோகமாகவும் காணப்படுகின்றது. தமிழீழ மக்கள் தமது சுய நிர்ணய உரிமைக்காக போராடும் போராட்டத்தை வெறுமனே "பிரிவினை வாதம்" என்று முத்திரைகுத்தி இனஒடுக்கு முறை வாதத்திற்கு துணை போவது மிகப்பெரும்வரலாற்றுத்தவறாகும்.

ஒரு நாடு எவ்வளவுக்கு எவ்வளவு பரந்ததாக இருக்கிறதோ, ஒரு நாடு எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமான இனக் கூறுகளைக் கொண்டிருக்கிறதோ அந்நாடு அவ்வளவுக்கு அபிவிருத்திக்கான வாய்ப்புக்களையும் பண்பாட்டு வளர்ச்சிக்கான வாய்ப்புகளையும் கொண்டிருக்க முடியும். ஆனால் ஓர் இனம் இன்னோர் இனத்தை ஒடுக்குமானால் ஒடுக்கப்படும் இனம் பிரிந்து சென்று விடுதலை பெறுவதைத் தவிர வளர்ச்சிக்கும் ஜனநாயக மேம்பாட்டிற்குமான வழி வேறில்லை.

## சுயநிர்ணய உரிமைப் போராட்டம் "பிரிவினைவாதம்" அல்ல

1990 ஆம் ஆண்டின் பின்னிருந்து ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா ஆகிய மூன்று கண்டங்களிலும் மொத்தம் 22 தேசிய இனங்கள் விடுதலை பெற்று சுதந்திர அரசுகளை அமைத்துக் கொண்டன. ரஷ்ய பேரின ஆதிக்கத்திலிருந்து 14 தேசிய இனங்கள் பிரிந்து சென்று சுதந்திர அரசுகளை அமைத்தன. அவ்வாறே யுகோஸ்லேவிய அரசிலிருந்து ஐந்து இனங்கள் பிரிந்து சென்று தேசிய அரசுகளை அமைத்தன. இவ்வாறே செக்கோஸ்லாவியாவிலிருந்து ஸ்லாவியா விடுதலை பெற்றது. இவ்வாறாக ஆபிரிக்காவில் எரித்திரியா விடுதலை பெற்றது. மேலும் இந்தோனேசியா ஆதிக்கத்திலிருந்து கிழக்குத் தீமோர் விடுதலை பெற்றது. இந்த வகையில் 1990 ஆம் ஆண்டின் பின்னிருந்து விடுதலை பெற்ற 22 தேசிய அரசுகளின் பட்டியலை இங்கு நோக்குதல் நலம்.

லிதுவேனியா, லட்வியா, எஸ்ரோனியா, உக்ரெய்யின், பிலோறஸ், ஜோர்ஜியா, மோல்டோவா, ஆர்மேனியா, அசார்பைசான், கசகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், துர்க்மெனிஸ்தான் என 14 இனங்களும் ரஷ்யாவிலிருந்து பிரிந்து சென்று விடுதலை பெற்றன. யூகோஸ்லாவியாவில் சேபியர்களின் இன ஒடுக்குமுறையில் இருந்து பிரிந்து சென்று விடுதலை பெற்றவையாக பொஸ்னியா-ஹெர்சகோவினா, குறோசியா, மெசடோனியா, ஸ்லோவேனியா, மொன்ரிநீக்குறோ என்பன அமைந்துள்ளன. ஏனைய விடுதலை பெற்ற அரசுகளின் பட்டியலில் ஸ்லாவியா, எரித்திரியா, கிழக்குத்தீமோர் என்பன அமைகின்றன. அடுத்து கொசோவா விரைவில் விடுதலை பெற்றுவிடும் என்று பேசப்படுகின்றது. மேற்படி விடுதலைக்காக போராடிய அனைத்து இனங்களையும் முதலில் அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் ஆதரித்ததுடன் அவை இறுதியில் சர்வதேச சமூகத்தின் பேராதரவையும் பெற்றன. சிறிதளவு எதிர்க்குரல் இவற்றிற்கு இருந்த போதிலும் இவை விடுதலைப் போராட்டங்களாக இறுதியில் சர்வதேச சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டன என்பது கவனிக்கத்தக்கது. மேற்படி 22 விடுதலை பெற்ற இன அரசுகளுக்கும் பொருத்தமான அதே நியாயப்பாடுகள் தமிழீழ மக்களின் போராட்டத்திற்கும் உண்டு என்பது பெரிதும் கருத்தில் எடுக்கப்பட வேண்டியது அவசியம்.

ஒடுக்கப்படும் மக்கள் தமது வாழ்வுக்காகப் பிரிந்து சென்று விடுதலை அடைவது தவிர்க்கப்பட முடியாதது. அதுவெறுமனே ஒரு பிரிவினைவாதம் ஆகாது. பிரிவதிற்தான் அவர்களின் வாழ்வு இருக்கின்றது என்றால் ஒடுக்குமுறைக்கு பதில் பிரிந்து செல்வதாக அமையும் போது அந்த இனம் பிரிந்து சென்று விடுதலை பெறுவது தான் வரலாற்றின் தீர்ப்பாய் அமைகின்றது.

**மன்னராட்சி பிரபுத்துவ சிந்தனை**

தேசிய இனப்பிரச்சினைக்கு முதலாளித்துவ சமூக அமைப்புத் தீர்வுகளை கண்டமைபற்றி லெனின் மகிழ்ச்சியுடன் வரவேற்றார். முதலாளித்துவ சமூக அமைப்பில் சுவீடன் வாக்கெடுப்பின் மூலம் பிரிந்து சென்றமையை வரவேற்ற லெனின்; ஓர் அரச எல்லைக்குள் பல இனங்கள் சுவிஸ்லாந்தில் தீர்வு கண்ட முறைமையையும் பாராட்டத் தவறவில்லை. முதலாளித்துவ சமூக அமைப்பில் ஓர் அரச எல்லைக்குள் மூன்றுக்கு மேற்பட்ட இனங்கள் உரிமையுடன் சக வாழ்வு வாழ்வதற்கு உதாரணமாக சுவிஸ்லாந்தைப் பாராட்டிய லெனின்; அதே முதலாளித்துவ அமைப்பில் சுவீடன் வாக்கெடுப்பின் மூலம் 1905 ஆம் ஆண்டு பிரிந்து செல்ல முடிந்தமையையும் வரவேற்கத் தவறவில்லை. தேசிய இனம் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விவ காரத்தில் முதலாளித்துவத்திடமும், ஏகாதிபத்தியத் திடமும் முன்னேற்றகரமான அனுபவங்கள் இருப்பதை நாம் நிராகரிக்க முடியாது.



மு.திருநாவுக்கரசு
அரசியல் ஆய்வாளர்

தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பது முதலாளித்துவ சமூக அமைப்பிலும் ஏகாதிபத் திய நிலையிலும் நிபந்தனைக்கு அப்பாலானவை என்பது இதன் அர்த்தம் அல்ல. அவை நிபந்தனைக்குஉட்பட்டவை தான். ஆனால் மன்ன ராட்சி கலாசாரமும், பிரபுத்துவ சமூகச் சிந்தனையும் மேலோங் கிய இடங்களிற்தான் தேசிய இன ஒடுக்கு முறை அதிகம் கோலோச்சுகின்றது.

## சிங்கள மன்னராட்சி சிந்தனைப் புலத்திலிருந்தே தமிழ் பேசும் மக்கள் இங்கு ஒடுக்கப்படுகிறார்கள்

சிங்கள மன்னராட்சிப் பிரபுத்துவ சிந்தனைப் புலத்திலிருந்துதான் தமிழ் பேசும் மக்கள் ஒடுக்கப்படுகிறார்கள். ஆதலால் இலங்கைத்தீவில் இன ஒடுக்கு முறை என்பது மன்னராட்சி பிரபுத்துவ சிந்தனையின் வெளிப்பாடாகும்.

நவீனத்துவத்தின் பரிசுப்பொருள்களான விஞ்ஞானத்தையும் தொழில்நுட்ப சாதனங்களையும், நவீன உபகரணங்களையும் ஹிட்லர் பெரிதும் அரவணைத்துக் கொண்ட போதிலும் அரசியற் சிந்தனையில் ம்ன்னனாகவே இருந்தார். கொடூரமான பேரரசருக்கு உரிய இயல்புகளுடனும், ஆசைகளுடனும் சிந்தனையுடனும் இருந்த ஹிட்லரால் பாரிய யூத இனப் படுகொலையை எவ்வித கூச்சமுமின்றிச் செய்யமுடிந்தது. இன ஒடுக்கு முறை என்பது எப்போதும் ஜனநாயகத்திற்கு எதிரானது. மன்னராட்சி, பிரபுத்துவம், எதேச்சாதிகாரம் என்பன எப்போதும் ஈவிரக்கமற்ற இன ஒடுக்கு முறையின் ஊற்றாய் உள்ளன. தனிம்னித ஏதேச்சாதிகாரமும், இனக் குழும எதேச்சாதிகாரமும் ஒரே இயல்புள்ள எதேச்சாதிகாரங்களே ஆகும். ஜனநாயகம் என்பது இன அடிப்படையில் மட்டும் கட்டியெழுப்பப்படுமாயின் அதுவும் இறுதி அர்த்தத்தில் எதேச்சாதிகாரத்தில் கால்வைத்து எத்தகைய அணு ஆயுதரீதியான இனப் படுகொலைக்கும் தயங்காது.

**நிபந்தனைக்கு உட்பட்ட வகையில் தீர்க்க வேண்டிய தேவை**

முதலாளித்துவத்தின் இயல்பின்படி முதலாளித்துவ - ஏகாதிபத்திய சந்தை சுமுகமாக இயங்குவதற்கு இனப்பிரச்சினை நிபந்தனைக்கு உட்பட்ட வகையிலாயினும் சுமுகமாகத் தீர்க்கப்பட வேண்டிய தேவை உண்டு. அந்த வகையில் சூழலுக்கேற்ப அது குறைந்த பட்ச ஜனநாயகத்தன்மையை ஏற்படுத்த விரும்புகின்றது. அத்தகைய ஒரு நிர்ப்பந்தத்தின் பின்னணியில் முதலாளித்துவ ஜனநாயகத்தின் எல்லைக்குட்பட்ட முன்னேற்றம் ஏற்பட வாய்ப்புண்டு. மன்னராட்சி, பிரபுத்துவம், எதேச்சாதிகாரம் என்பன எப்போதும் தேசிய இனங்களின் உரிமைகளுக்கு எதிரானவை. ஆனால் முதலாளித்துவ- ஏகாதிபத்திய நலன்கள் தேசிய இனங்களின் நலனில் ஒப்பீட்டு ரீதியான எதிர்த்தன்மைகளையும் ஒப்பீட்டு ரீதியான நன்மைகளையும் கொண்டுள்ளன.

மேலே குறிப்பிட்ட 22 இன அரசுகளின் விடுதலைக்கு ஆதரவளித்த அமெரிக்கா, அதே காலத்தில் குர்டிஷ் இன மக்களின் விடுதலைக்கு ஆதரவளிக்கவில்லை. மேலும் ரஷ்யாவில் இருந்து 14 அரசுகள் பிரிந்ததை ஆதரித்த அமெரிக்க அரசானது அதே ரஷ்யாவிலிருந்து செச்னியா பிரிவதை ஆதரிக்கவில்லை.

குர்டிஸ் பிரச்சினையை சிறிது நோக்குவோம். குர்டிஸ் நிலப்பரப்பானது ஈராக், ஈரான், துருக்கி ஆகிய மூன்று நாடுகளுக்கிடையே சிக்குண்டு உள்ளது. ஈராக்கிலிருந்து குர்டிஸ் பிரிந்து செல்வதாயின் துருக்கியிலிருந்த அது பிரிந்து செல்வதையும் சேர்த்து ஆதரிப்ப தாகவே அமையும். அமெரிக்காவின் நட்பு நாடான துருக்கியின் கோபத்திற்குள்ளாக அமெரிக்கா தயாரில்லை. மேலும் குர்டிஸ் ஈராக்கிலிருந்து பிரிந்து சென்றுவிட்டால் ஈராக் சிறிதாகவும் ஈரான் பெரும் அரசாகவும் திகழ முடியும். ஆதலால் ஈரானுக்கு சமபலமாக ஈராக் இருக்க வேண்டியது அவசியம். எனவே குர்டிஸ் பிரிந்து செல்வதை அமெரிக்கா ஆதரிக்கமாட்டாது. மேற்படி 3 அரசுகளின் ஆதிக்கத்திற்குட்பட்ட வகையில் காணப்படும் குர்டிஸ் மக்களின் அமைவிடப் புறநிலை யதார்த்தமானது. குர்டிஸ் பிரிந்து ஒரு சுதந்திர அரசாவதை இலகுவில் சாத்தியப்படவிடாது தடுக்கவல்ல ஒரு கசப்பான வரலாற்று யதார்த்தமாக உள்ளது.

செச்னியாவை எடுத்துக் கொண்டால் அது ஒரு மறக்க முடியாத சோகக் கதை. அப் போராட்டத்தின் தோல்விக்கு பெருமளவிற்கு செச்னிய அதிதீவிர வாதிகளே பொறுப்பாவர். செச்னிய போராட்டத்தின் தோல்வியிலிருந்து விடுதலை விரும்பிகளும் ஜனநாயக விரும்பிகளும் கற்கவேண்டிய பாடங்கள் நிறையவே உள்ளன. அது பற்றிய சில விவரங்கள் மட்டும் இக்கட்டுரையின் தேவைக்கேற்ப நோக்குவோம்.உடைந்து கொட்டுண்டு கொண்டிருந்த ரஷ்ய சாம்ராட்சியம் மேலும் பல உள்நாட்டு வெளிநாட்டு நெருக்கடிகளுக்குள் சிக்குண்டு தவித்துக் கொண்டிருந்தது. ஏற்கனவே 14 அரசுகள் பிரிந்திருந்த பின்னணியில் 15 ஆவது அரசாக செச்னியாவும் பிரிய முடியும் என்ற நிலை காணப்பட்டது. 1996 ஆம் ஆண்டு செச்னியர்களுக்கு தலைமை வகித்த மஸ்கடோ நிலைமைகளை யதார்த்த பூர்வமாகச் சிந்தித்து, ரஷ்யாவுடன் ஓர் ஒப்பந்தத்திற்கு வந்தார். அதன்படி ரஷ்ய இராணுவம் முற்றிலும் வாபஸ் வாங்கப்பட்டதோடு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் உருவாக வழி பிறந்தது.

**செச்னியாவில் ஏற்பட்ட தோல்வி**

அதற்கான ஒப்பந்தம் 1996 ஓகஸ்ட் 31 ஆம் திகதி கைச்சாத்தானது. 1997 பெப்ரவரியில் தேர்தல் மூலம் செச்னிய அரசாங்கம் அமைக்கப்பட்டுமாயிற்று. ஒருசில ஆண்டுகளுக்குள் பூரண சுதந்திரம் என்ற நிலையும் தோன்றி இருந்தது. ஆனால் யுத்தப் பிரபு என வர்ணிக்கப்படும் அதிதீவிர வாதியான சாமில் பசெயவ் பதவி ஆசையின் பொருட்டு ஒப்பந்தத்திற்கு எதிராக ரஷ்ய உதவி உள்நாட்டு அமைச்சரைக் கடத்திக் கொலை செய்ததோடு நிலைமைகள் மாறத் தொடங்கின. செச்னியாவின் புதிய அரசாங்கத்தால் நிலைமைகளைக் கட்டுப்படுத்தமுடியாத அளவிற்கு பசேயவ் தலைமையிலான அதிதீவிரவாதிகளின் தாக்குதல்கள் அமைந்தன. இதனைப் பயன்படுத்தி முழு அளவிலான இராணுவ ஆக்கிரமிப்பை ரஷ்யா மேற்கொள்ளத் தொடங்கியது. முதலில் வான் தாக்குதலுடன் ஆரம்பித்த ஆக்கிரமிப்பு பின்பு பெரும் படைநகர்த்தலுடன் தனது இரும்புக் கரங்களைப்பரப்பியது.அதேவேளை உலகளாவிய இஸ்லாமிய எதிர்ப்புவாதமும் கூட்டுச்சேரக் கூடிய அளவிற்கு பசெயவ் வாய்ப்புக்களை அளித்தார். இப்பின்னணியில் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகமும் ரஷ்யாவிற்கு செயலளவில் மௌனமாய் ஆதரவு அளித்தது. மஸ்கடோ மிகவும் யதார்த்த பூர்வமான ஒரு தலைவன். ஆனால் அதி தீவிரவாத யுத்தப்பிரபுத்துவத்தின் முன் அவர் செயலற்றவரானார். செச்னியர் உடனடி எதிர்காலத்தில் மீள முடியாத தோல்விக்கு ஆளாயினர். அடுத்து கொசோவோ பிரச்சினையை எடுத்துக்கொள்வோம். கொசோவோ விடுதலை அடைவதற்கான வாய்ப்புகள் மிகவும் பிரகாசமாக உள்ளன. கொசோவோ விடுதலை ஒரு புதிய படிப்பினையை பூமிக்கு தர இருக்கிறது. அது ஒரு நல்ல படிப்பினை.

தேசிய இனங்கள் போராடுவது என்பது ஒரு பிரிவினைவாதம் அல்ல. கடந்த 17வருடங்களில் 22 இனங்கள் பூரண விடுதலை பெற்றுள்ளதுடன் 23 ஆவதாக கொசோவோவும் விடுதலை பெற உள்ளது. இவற்றை எல்லாம் ஆதரித்த மேற்குலகமும் சர்வதேச சமூகமும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் அவ்வாறு அணுக வேண்டியதே சரியானது.ஒடுக்கப்படும்இனங்கள்பிரிந்துசென்று விடுதலை பெறுவது 21 ஆம் நூற்றாண்டிலும் தொடரும் ஒரு யாதார்த்தமாகும்.

அரசுகள் தமது அரச நலன்கள் சார்ந்து தான் செயற்படும் என்பது அரசியலில் ஓர் அகரவரிசைப் பாடமாகும். அத்தகைய அரசுகளைத் சூழலின் கைதியாக்கி விடுதலைக்கு அதரவளிக்கச் செய்வது ஒவ்வொரு போராடும் தேசிய இனத்தினதும் பொறுப்பாகும். சர்வதேச சமூகத்தின் ஆதரவின்றி, சர்வதேச பாதை என்ற ஒன்றின்றி எந்த ஒரு இனமும் ஒருபோதும் விடுதலை அடைய முடியாது.தேசியஇனவிடுதலையானது ஒரு சர்வதேச பாதையில் பயணித்தால் மட்டுமேதான் சாத்தியமாகும். மீன் வாழநீர்தேவைப்படுவது போலஇனம்விடுதலை அடைய சர்வதேசப் பாதை அவசியமாகும். காணப்படும் சர்வதேச சூழலை சுதாகரித்து அதில்சாத்தியமான ஒருபாதையைத் தேடியஇனங்களேஇதுவரை விடுதலைபெற்றுள்ளன. மேற்படி 22 அரசுகளும் இவ்வாறு தான் விடுதலை அடைந்தன. அவற்றில் எதுவும் பிரிவினைவாதம் அல்ல. ஒடுக்குமுறைக்குப் பதில் விடுதலைதான். *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PC PARK (PVT) LTD

the path to computer paradigm

# 633, K.K.s Road, Jaffna. Tel :021 222 9581, Fax : 021 222 9581

## X-MAS Non Stop கொண்டாட்டம்

**Processors**

3.0 GHz Intel Pentium HT (03 Year) - Rs.9,000.00
3.0 GHz Intel Pentium Dual Core (03 Year) - Rs.11,250.00

**RAM Types**

512MB DDR-2 PC-667 Kingston (03 Year) - Rs.2,200.00
1GB DDR-2 PC-667 Kingston (03 Year) - Rs.3,300.00
512MB DDR-1 Hynics (01 Year) - Rs.3,500.00

**Hard disk Drives**

80GB SATA Maxtor (03 Year) - Rs.6,250.00
160GB SATA Hitachi (03 Year) - Rs.7,000.00
80GB IDE Samsung (01 Year) - Rs.6,200.00

**Motherboards**

ASUS P5P800S (03 Year) - Rs.7,500.00
ASUS P5S-MX SE (03 Year) - Rs.6,700.00
ASUS P5GC –MX (03 Year) - Rs.7,700.00

**Optical Drives**

DVD Writer ASUS 18X Light scribe(01 Year) - Rs.4,750.00
DVD Writer Samsung 18X Dual Layer (01 Year) - Rs.4,500
DVD Rom ASUS 16X (01 Year) - Rs.3,250.00
CD Rom HP 52X Black (01 Year) - Rs.2,000.00
Combo Drive Samsung Black (03 Year) - Rs.3,500.00

**Flash Drives**

1GB Flash Drive Kingston (05 Year) -Rs.1,700.00
2GB Flash Drive Kingston (05 Year)- Rs.2,700.00
4GB Flash Drive Kingston (05 Year) - Rs.4,700.00
MP3 Player 512MB Rs.5,800.00

**VGA Cards**

128MB ASUS AX300SE PCI Express (03 Year) - Rs.4,700.00
128MB ASUS N6200 AGP (03 Year) - Rs.5,000.00

**TV CARDS**

TV Combo Gadmai (01 Year) - Rs. 3,500.00
TV Card MSI TV@NYWHERE (01 Year) - Rs. 4,000.00

**Key Board & Mouse**

Keyboard PS2 Black - Rs.450.00
Mouse Genius Optical PS2 Black - Rs.500.00
Wireless Optical Mouse -Battery free - Rs.1900.00

**HP Laser Jet Toner**

HP Toner 12A Rs.8,250.00
HP Toner 15A Rs.8,500.00
HP Toner 13A Rs.7,800.00

and

Sound Card Creative 501 Blaster (01 Year) - Rs.2,750.00
ATX Casing P4 450W Black (01 Year) - Rs.4,500.00
Modem Internal 56kb Fax (01 Year)- Rs. 1,200.00
EPSON Ribbon - Rs.580.00

December 17 முதல் December 21 வரை மட்டுமே.


# ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்




## அமரர் பரமசாமி செட்டியார் நகுலராஜா
(சாந்தி சினிமா, யாழ்ப்பாணம்)

நிகழும் சர்வசித்து வருஷம் கார்த்திகை மாதம் 12 ஆம் நாள் புதன்கிழமை (28.11.2007) முற்பகல் 10.45 சதுர்த்தித் திதியில் சிவபதம் அடைந்த அமரர் பரமசாமி செட்டியார் நகுலராஜா அவர்களின் 16 ஆம் நாள் சபிண்டீகரண வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 13.12.2007 அன்று வீட்டில் நடைபெற்றன என்பதனை அறிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதியபோசனமும் இன்று (16.12.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிமுதல் நடைபெறவுள்ளன. இந் நிகழ்வில் தாங்களும், தங்கள் குடும்பத்தினரும் வருகை தந்து எம்மோடு கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மரண நிகழ்வு அறிந்து அனுதாபத் தந்தி அனுப்பியும், தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டும், வருகை தந்தும், மலர்வளையம் வைத்தும் எமது துயர் நேரத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தகவல்:
ந.செந்தூரன் (மகன்).

427/24, FERGUSON ROAD,
MATTAKULIYA,
COLOMBO- 15,
PHONE:- 0777- 267 027.

(சி/54712)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள, தமிழ், முஸ்லிம் தரப்புகளின் அபிலாசைகளை காத்திரமான கட்டமைப்பு ஒன்றில் மூலமே எய்த முடியும்



இலங்கையின் இனப்பிரச்சினையைப் பற்றி ஒருவர் புரிந்துகொள்ள முற்படும் போது, புதிர் நிறைந்ததொரு கேள்வி அவர் முன் எழுந்து நிற்கிறது. அதாவது அரசியல் ரீதியாகவோ அல்லது இராணுவ ரீதியாகவோ இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வொன்று எட்டப்படாது, ஏறத்தாழ 25 ஆண்டுகள் கால மாக நீண்டு செல்லும் உள்நாட்டு யுத்தமாக அது மாறியுள்ளமைக்கான காரணமென்ன? என்ற வினாவே அதுவாகும்.

அந்த ஒரு கேள்வி மட்டுமல்ல அப்புதிருக்கு இன்னும் பல பக்கங்களிலிருந்தும் கேள்விகள் எழுகின்றன. அந்த வகையில், யுத்த மோதல்களை முடிவுக்குள் கொண்டு வந்து சமாதானத்தை எட்டுவது தொடர்பான சகல பேச்சு வார்த்தை முயற்சிகளும் தோல்வியில் முடிந்ததன் பின்னர், அரசு மற்றும் விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்புக்களும் தத்தமது யுத்த முன்னெடுப்புகளை மீண்டும் மிகத் தீவிரமாக மேற்கொள்வது ஏன்? இச் சிக்கல் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மற்றும் அரசியல் ரீதியிலான அணுகுமுறைகளால் தீர்த்துவைக்க இயலாத அளவுக்கு சாத்தியமற்ற ஒன்றா?

சிங்கள மற்றும் தமிழ் சமூகங்ளைச் சேர்ந்த தீவிர இனவாதச் சக்திகள் யுத்த முனைப்பு நடவடிக்கைள் மற்றும் யுத்த மூலமான தீர்வுகள் குறித்து மட்டுமே பெருவிருப்புக் காட்ட முன் வருவது ஏன்? அரசியல் ரீதியிலான தீர்வுகள் எட்டப்படுவதற்கு அந்த இனவாத சக்திகள் எதிராக நிற்பது ஏன்? இந்த இனச் சிக்கல்கள் எதிகாலத்திலும் கூட மென்மேலும் நீண்டு தொடர்வதற்கு வாய்ப்பளிக்கப்படும் விதமாக, அந்த மோதலுக்கு உந்து சக்தி எங்கிருந்து கிடைத்து வருகிறது?

இந்த அனைத்துக் கேள்விகளுக்குமான விடைகளைத் தேடிக் கொள்வதற்கு, நாம் அப்பிரச்சினை தொடர்பாக ஆழமாக காத்திரமாகச் சிந்திக்கப் பழகிக் கொள்வதால் மட்டுமே ஆக்கபூர்வமான முடிவுகளை எட்டி அதன் மூலம் இவ்விடயத்தைக் கையாள முடியும்.

**காத்திரமாகச் சிந்திக்கத் தவறியதே பிரிவினைவாதப் போக்குக்கு தூண்டுதல் அளித்தது**

ஏனெனில் அக் கேள்விகளுக்குச் சுருக்கமான அல்லது ஜனரஞ்சகமான பதில்கள் கிடைக்க மாட்டாது என்பதே அவ்வாறு கூறுவதற்குக் காரணமாகும். அரச அதிகார மேலாதிக்கம் தொடர்பான விடயம், இந் நாட்டின் தேசியச் சிக்கலில் மையப்படுத்தப்பட்டுள்ளதன் காரணமாக அப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பது பெரும் சிரமத்துக்குரியதாகியுள்ளது என்பதே இக் கேள்விகளுக்கு என்னால் முன்வைக்கப்படும்'காத்திரமான'' விளக்கமாக அமைகிறது. அது தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படுவதற்குத் தேவையான ஆற்றலும் சமுதாய பலமும் அரச மேலாதிக்

பேராசிரியர் ஜயதேவ உயன்கொட

கத்தால் ஈட்டிக் கொள்ளப்பட்டுள்ளது என்பதும் எனது வாதமாகும். எனது இப்பதில் ஆழமாக விளக்கமளிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

இலங்கையின் இனப்பிரச்சினையோடு தம்மைச் சம்பந்தப்படுத்திக் கொண்டுள்ள சிங்களவர் மற்றும் தமிழர்கள் போன்றே, இவ்விரு தரப்புக்களையும்விடக் குறைந்த அளவினரான முஸ்லிம் தேசியவாத கட்டமைப்புகளும் கூட, அரச நிர்வாகப் பலத்தைப் பகிர்ந்துகொள்வது என்ற அடிப்படை ரீதியிலேயே இப்போராட்டத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளன. அந்த வகையில், தேசிய வாதம் என்பது இந்த இராச்சியங்களின் போராட்டத்தை கருத்தாழமாகவும் ஒருங்கிணைந்த ரீதியிலும் வெளிப்படுத்தும் ஒரு மார்க்கமேயாகும் எனக் கொள்ளமுடிகிறது. இதற்கமைய, இன்றைய இனப்பிரச்சினை மோதலின் மத்தியில், இனரீதியில் தலைதூக்கியுள்ள-தனி இராச்சிய அலகு அபிலாஷை மூன்றுக்கும் இடையில் போட்டி மற்றும் போராட்டம் நிலவுவதாகவே கூறமுடியும்.

இந்த இராச்சிய அலகு உருவாக்கச் செயற்பாடுகள் மூன்றும் இலங்கையின் இனரீதியிலான சமுதாயக் கட்டமைப்புகள்ஊடாகத் தலையெடுத்துள்ள நிலைப்பாடுகளாகும். அந்த வகையில், அந்த மூன்றின் மத்தியிலும் வெவ்வேறான இலட்சணங்களும் குறிக்கோள்களும் காணப்படுகின்றன. அவற்றுக்கு அமைய இனரீதியான சிங்கள சமுதாயக் கட்டமைப்பின் முக்கிய குறிக்கோளாக அமைவது, அடிமைத்தளை ஆட்சியிலிருந்து விடுபட்டதன் பின்னர் இலங்கையை சிங்கள முதலாளித்துவ மற்றும் மத்தியதர முதலாளித்துவ தரப்புக்களின் அரசியல் ஆதிக்கத்துக்கு கீழான ஒற்றையாட்சி நிலவும் மத்திய அரசொன்றாக நிறுவிக்கொள்வதும், அதைப் பேணிப் பாதுகாத்துக் கொள்வதுமே ஆகும்.

தமிழ்ச் சமுதாயத்தைப் பொறுத்த வகையில் இதற்கு மாறான இராச்சிய அலகு உருவாக்க அபிலாஷை இரண்டு குறிக்கோள்களைக் கொண்டுள்ளது. முதலாவதாக, வடக்கு மற்றும் கிழக்கு என்றஇரு மாகாணங்களிலும் சமமான சுயநிர்ணயச் சுதந்திரம் கொண்ட பிரதேச ரீதியிலான அரச அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளும் நடைமுறையே, தமிழ் பிரபு வர்க்கம் மற்றும் முதலாளித்துவத் தரப்புகளால் முன்வைக்கப்பட்டுள்ள அரசியல் கட்டமைப்பாகும். இதனிடைய, இலங்கை

> இலங்கையின் இனப்பிரச்சினையைப் புரிந்து கொள்ளவும், அதன் ஆழத்தில் புதைந்திருக்கும் பல கேள்விகளுக்கு விடை காணவும் இந் நாட்டின் இனப் பிரச்சினையில் சம்பந்தப்பட்டுள்ள சிங்கள, தமிழ், மற்றும் முஸ்லிம் தரப்புகள் ஒவ்வொன்றும் தத்தமது இறுக்கமான நிலைப்பாட்டிலிருந்து வெளிவந்து காத்திரமாகச் சிந்திக்கப்பழகிக் கொள்ளவேண்டியுள்ளது.
>
> அந்த வகையில், இலங்கையின் மூன்று சமுதாயப் பிரிவுகளும், குறிப்பாகப் பெரும்பான்மைச் சமூகத்தரப்புகளின் மேலாதிக்கச் சக்திகளும் கூட, ஏறத்தாழ ஐம்பது ஆண்டு பழைமைவாதக் கண்ணோட்டத்திலிருந்து விடுபட்டு-தத்தமது-ஒன்றையொன்று புரிந்து தெளிந்து கொள்ளாத- தெரிந்து கொள்ளவிரும்பாத போக்கைக் கைவிட்டு அன்னியோன்ய பாவத்துடன், தெளிந்த கண்ணாடி போன்ற தூய எண்ணத்துடன் ஒருவரையொருவர் அணுகினால் மட்டுமே இலங்கைக்கு விமோசனம் கிடைக்கும் என்பதை விளக்கும் வகையில் அமைகிறது இக்கட்டுரை.

யென்ற இராச்சியத்திலிருந்து பிளவுபட்டு, சுதந்திரமான தேசிய அரசொன்று உருவாக்கிக் கொள்ளபட வேண்டியுள்ளது என்பதே வடக்கு மற்றும் கிழக்கில் மாத்திரம் மரபு வழி சமுதாய அடித்தளம் அமைந்துள்ள மத்தியதர முதலாளித்துவத் தமிழர் தரப்புகளின் நிலைப்பாடாகும்.

இந்த இரு தரப்பு நிலைப்பாடுகளுக்கும் பதிலளிக்கும் விதமாக, முஸ்லிம் மக்களுக்

## அவை தத்தமது இறுக்கமான நிலைப்பாடுகளில் இருந்து வெளியே வந்து தெளிந்த பார்வையுடன் அணுகவேண்டும்

கும் பிரதேச ரீதியிலான சுதந்திரமான சுயநிர்ணய உரிமை அமையும் அதிகாரப் பகிர்வுடனான தேசிய அரசொன்று - இராச்சியமொன்று உருவாக்கப்படவேண்டுமென்பதே கிழக்கு மாகாணத்தில் மரபு வழி உரிமை கொண்டுள்ள மத்தியதர முஸ்லிம் முதலாளித்துவத் தரப்புக்களின் நிலைப்பாடாகியுள்ளது.

இந்த, புறம்பான ஆட்சியென்ற கட்டமைப்பு நிலைப்பாடுகளின் மத்தியில் இன அடிப்படையில் போன்றே குலரீதியிலான அடிப்படை வாதமும் கூட இத்தரப்புக்கள் மத்தியில் நிலவி வருவதை மிக இலகுவாகவே புரிந்து கொள்ள முடிகிறது.

**நல்லெண்ணம் காத்திரமான சிந்தனையே இனப்பிரச்சினைக்கும் பிரிவினைவாதத்துக்கும் பரிகாரம்**

மேற்குறிப்பிட்ட கோணங்களை ஆழ்ந்து நோக்கி பார்க்கும்போது நேர்கையில், இராச்சிய உருவாக்கம் என்ற இந்த மூன்று கட்டமைப்பு நிலைப்பாடுகளின் மத்தியில்அவை பரஸ்பரம் ஒன்றுக்கொன்று போட்டிபோடும் - ஒன்றுக்கொன்று புலப்படாத- மற்றும் ஒன்றுக்கொன்று நேர்மாறான தன்மை கொண்டிருப்பதைத் தெளிவாகக் கருதமுடிகிறது. அந்த வகையில் குறிப்பாக சிங்கள மற்றும் தமிழ் என்ற இனரீதியிலான அரச கட்டமைப்பு உருவாக்க நிலைப்பாடுகளின் இடையில் அத்தன்மை மிகத் தீவிரமாக வெளிப்படுத்தப்படுவதைக் காணமுடிகிறது.

அதற்கமைய, 1950 களில் இருந்து பிற்பகுதி வரையான மூன்று தசாப்த காலமாகவே பேச்சுவார்த்தைகள் மூலமான இடைக்கால சமாதான நிலைப்பாடொன்றை ஈட்டிக்கொள்ள அந்த இரு தரப்புகளாலும் இயலாது போய் விட்டது. அதன் காரணமாக, தமிழ் சமூகத்தின் புறம்பான இராச்சியம் என்ற கோட்பாடு தலையெடுத்து, மற்றும் அதன் பின்னர் இனரீதியான சிவில் யுத்தம் ஆரம்பிக்கப்படுவதற்கு இரு தரப்புகளின் நேர்மாறான தன்மை தானாகவே வழிவகுத்தது.

இந்த ஒன்றுக்கொன்று பொருந்தாத தெளிவாகப் புலப்படுத்திக்கொள்ள இயலாத இராச்சிய உருவாக்கக் கட்டமைப்புகள் இரண்டாலுமோ, யுத்தத்தின் மூலமாகவோ சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலமாகவோஒன்றிலிருந்து மற்றொன்று பிரிந்து பிளவுபட்டு வேறாகப் போய்விடுவதற்கோ, ஒன்று மற்றொன்றைத் தோற்கடித்து விடுவதற்கோ, இடைக்கால சமாதான நிலைப்பாடொன்றை உருவாக்கிக் கொள்வதற்கோ இன்றுவரை இயலாது போயுள்ளது.

இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகள் தோல்வியைத் தழுவிக்கொண்டுள்ளதற்கான காரணத்தைப் புரிந்து கொள்வதற்கும் கூட, அரச அதிகார மேலாதிக்கப் போக்கு பெருந்தடையாக அமைகிறது. இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடம் பெற்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், மிக விரைவில் சமாதான உடன்பாடொன்று எட்டப்பட்டு, யுத்தமும் முடிவுக்கு வந்து, புரையோடிப்போயிருக்கும் இனப்பிரச்சினைக்கும் தீர்வு எட்டப்படக் கூடும் என்றே, இந் நாட்டின் பெரும்பாலான மக்கள் எதிர்பார்த்திருந்தனர்.

ஆனால் அவர்களது அந்த எதிர்பார்ப்பு அந்தப் பல தடவைகளிலும் சிதைந்து போகவே நேர்ந்துள்ளது. சமாதானப் பேச்சுக்கள் மீண்டுமொரு தடவை உயிர் பெற்றாலும் கூட, அச்சமாதானப் பேச்சுக்கள் ஊடாக அரச நிர்வாக அதிகாரம் தொடர்பான சிக்கல் தலை தூக்கவே செய்யும். அரசு மற்றும் விடுதலைப் புலிகள் தரப்புக்களின் இடையில் போன்றே முஸ்லிம் அரசியல் சக்திகளாலும் ஏற்றுக் கொள்ளத் தக்க விதமாக தீர்வை எட்டக் கூடிய கட்டமைப்பொன்று உருவாக்கப்படாதவிடத்து திரும்பவும் அந்த முயற்சிகள் தோல்வியிலேயே முடியக்கூடும்.

இலங்கையில் சிவில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் விடயத்திலும், சமாதானத்தை நிலைநிறுத்தும் விடயத்திலும் பெரும சவாலாக எழுந்து நிற்பது, மேலே குறிப் பிட்ட ஒன்றுக்கொன்று மாறுபட்ட- இராச்சியங்களை உருவாக்கும் மூன்று செயற்பாடுகளையும் ஒன்றாகச் சந்திக்கச் செய்ய வைக்கும் முயற்சி மற்றும் காத்திரமான எண்ணத்துடனான அரசமைப்பு ரீதியிலான கட்டமைப்பொன்று (அதாவது FRAME WORK )இனங்

தமிழில்-சுரா

காணப் பட்டு அதனைமுன்வைப்பதே ஆகும்.

**ஆற்றலும் சமுதாய பலமும் அரச மேலாதிக்கத்தால் ஈட்டப்படுகிறது**

அத்தகைய வரைவொன்றை உருவாக்கிக் கொள்ள மேற்கொள்ளப்பட்ட அனைத்துப் பேச்சுவார்த்தை முன்னெடுப்புகளின் போதும் அணுகப்பட்டுள்ள முறை வரவேற்கத்தக்கதாக அமையவில்லை. அதாவது, நாட்டின் சீரழிவுக்குக் காரணமான பிரச்சினையொன்றுக்குக் காத்திரமான தீர்வை எட்டுவது தொடர்பான பேச்சுவார்த்தைக்கு அவசியமெனக் கருதும் சகலருக்கும் பொருந்தும் பொதுவான அரசியல் மொழி சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் தேசியவாதக் கட்டமைப்புக்களின் மத்தியில் கையாளப்படவில்லை. இது உணரப்பட்டதொரு பெரும் குறைபாடாகும்.

அந்த வகையில் அமைச்சர் திஸ்ஸவிதாரணவின் தலைமையில் செயற்பட்ட சர்வ கட்சிப் பிரதிநிதிக் குழுவின் செயற்பாடுகளை அண்மைக்கால உதாரணமாகக் கொள்ளமுடியும். எந்த விதத்தில் நோக்கினாலும் இனப்பிரச்சினையைத் தெளிவாக இனங்கண்டு கொள்வதற்கும் அதைத் தீர்த்து வைப்பதற்கும் நல்லதொரு தீர்வை எட்டுவதற்கும் பிரச்சினை எந்த விதத்தில் அணுகப்படவேண்டியுள்ளது எனக் காத்திரமாக உணர்வு பூர்வமாகச் சிந்தித்துப் பார்க்கப்படவேண்டும். அதற்கு சிங்கள மற்றும் தமிழ்ச் சமுதாயங்களின் மத்தியில் காணப்படும் மேலாதிக்க இனவாத அரசியல் மொழி மற்றும் அதன் சொற்களைப் பயன்படுத்தி தனியான இராச்சியக் கட்டமைப்பு உருவாக்கும் அபிலாஷையில் கொண்டுள்ள இரு தரப்புக்களின் பிரதிநிதிகளால் அந்நியோன்ய பாவத்துடனான பேச்சுவார்த்தையொன்றை மேற்கொள்ள இயலாது.

அத்தகைய பின்புலமொன்றில் ஒன்றுக்கொன்று தொடர்பாடல்களைக் கையாண்டு கொள்வதோ அல்லது அழைப்பு விடுத்துக் கொள்வதோ சாத்தியமற்றதாகும். இந்த ஒவ்வொரு தரப்புக்குமிடையே பயனளிக்கத் தக்க பேச்சுவார்த்தையொன்றை மேற்கொள்வதென்பதும் இயலாததொன்றே.

ஒட்டு மொத்தமாக, அதிகாரப்பகிர்வு, ஒற்றையாட்சி, ஐக்கியராச்சியம், சமஷ்டி முறை நிர்வாகம், இடைக்கால நிர்வாகம், சுனாமிக்குப் பின்னரான அனர்த்த நிவாரணக் கட்டமைப்பு, மரபுவழித் தாயகப்பூமி, முஸ்லிம்கள் செறிந்து வாழும் பிரதேச நிர்வாகங்கள் போன்ற இவை அனைத்தையும் கடந்த சில ஆண்டுகளுக்குள் இலங்கையில் உருவான அரசியல் விவாதங்களாகவே கொள்ள முடிந்துள்ளது.

ஒரு விதத்தில் நோக்கும் போது, சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் இனவாத அரசியல் பிரதிநிதிகள் அவர்களாலேயே புரிந்து கொள்ள இயலாத மொழிகளிலேயே அவை குறித்துத் தர்க்க வாதம் புரிந்து வந்துள்ளதையே காண நேர்ந்துள்ளது.

இத் தடைகளை வெற்றி கொள்வதற்கு எந்தவொரு மார்க்கமும் இல்லையா? அது எத்தகைய மார்க்கமொன்றாக அமையக்கூடும்? என்ற கேள்விகளுக்கு விடை காண நாம் இது பற்றித் தொடர்ந்து ஆழ்ந்து நோக்க வேண்டியுள்ளது. *

## யாழ்ப்பாணத்திலும் அடிமை வியாபாரம்; பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் இருந்தது!

**டிசெம்பர்,20** - அடிமை வியாபாரம் பற்றி அனைவரும் அறிந்திருப்பீர்கள். பதினைந்து பதினாறாம் நூற்றாண்டுகளில் நாடு பிடிக்கும் போட்டியில் இறங்கிய ஐரோப்பிய நாடுகள் ஆசிய, ஆபிரிக்க நாடுகளைக் கைப்பற்றி தமது ஆட்சியின் கீழ் கொண்டு வந்தன. இவ்வாறு ஆசிய ஆபிரிக்க நாடுகளை ஆட்சி செய்த ஐரோப்பியர்கள் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளிலிருந்து அந்த நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களைத் தமது நாட்டிற்கு எடுத்துச் சென்றனர்.

ஆபிரிக்காவிலிருந்து ஐரோப்பியர் எடுத்துச் சென்றது. மனித அடிமைகளை. ஆபிரிக்காவிலிருந்து கப்பலில் ஏற்றிச் செல்லப்பட்ட அடிமைகள் ஐரோப்பிய நாடுகளில் ஏலம் விடப்பட்டனர். பணம் படைத்த வெள்ளையர்கள் தாம் விரும்பிய அடிமைகளை ஏலத்தில் வாங்கிச் சென்று தமது வேலைகளைச் செய்வித்தனர். ஆபிரிக்க ஆண்களும், பெண்களும் இவ்வாறு அடிமைகளாக ஐரோப்பாவில் விற்பனை செய்யப்பட்ட வரலாறு அனேகமாக அனைவரக்கும் தெரியும். இலங்கையில் அதுவும் யாழ்ப்பாணத்திலும் அடிமை வியாபாரம் நடைபெற்றது பலருக்குத் தெரிந்திருக்காது. யாழ்ப்பாணத்தில் பிரித்தானியரின் ஆட்சிக்காலத்திலும் அதற்கு முன்னரும் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட அடிமைகள் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டனர். வசதி படைத்தவர்கள் அடிமைகளை வாங்கிச் சென்று அவர்களை வைத்து வேலை வாங்கினர்.

**இன்றும் நினைவில் கொள்ள..... அன்றைய ஞாபகம் .... இங்கே!**

ஒரு காலத்தில் 'தாழ்த்தப்பட்டவர்கள்' என்று பெயரிடப்பட்டவர்களும் அடிமைகளை வைத்திருந்ததாக யாழ்ப்பாண வரலாறு கூறுகிறது.

1844 ஆம் ஆண்டு டிசெம்பர் 20 ஆம் திகதி பிரிட்டிஷ் அரசு அடிமை வியாபாரத்தை இலங்கையிலிருந்து ஒழிப்பதற்கான சட்டத்தை நிறைவேற்றியது. எனினும் அடிமை வியாபாரம் நிற்கவில்லை. பின்னர் கடுமையாக சட்டங்களை அமுல் டுத்தி பிரிட்டிஷ் அரசு அடிமை வியாபாரத்தை இலங்கையிலிருந்து முற்றாக ஒழித்தது.

- தாண்டவன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமண சேவை

எம்மிடம் M.B.B.S, B.A., B.Sc. பட்டதாரி உத்தியோகத்தர்கள் உள்நாடு, வெளிநாட்டுக் குறிப்புகள் மற்றும் சொந்தமாக தொழில் செய்பவர்கள், கமத்தொழில் உட்பட அனைத்து வகையான ஆண், பெண் மணமக்கள் உண்டு. தேவையானவர்கள் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: **நேசன்,**
TYMHA முன்பாக, ஆடியபாதம் வீதி, OR
திருநெல்வேலி.

**செல்வராசா (உமா),**
பிள்ளையார் கோயில் வீதி,
ஏழாலை வடக்கு.

T.P.: 077 4005968 சந்திக்கும் நேரம்: காலை 7 - 3 மணிவரை.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**நடராசா கிருபாகரன்**

தாயின் மடியில் 25-03-1955

ஆண்டவன் மடியில் 27-11-2006

திதி: (16.12.2007)

அன்போடும் பண்போடும் எமைக்காத்த அப்பாவே!
ஆண்டு ஒன்று ஆனதும் ஆறிடுமோ எம் துயரம்
அப்பா என்றழைக்க தப்பாமல் கடமைகள் செய்தீர்கள்
எங்கள் கண்ணீர்ப் பூக்களை காலடியில்
காணிக்கையாக்குகின்றோம்.

இல: 12, ராணி வீதி,
நல்லூர். (68958) **குடும்பத்தினர்.**

# STUDY IN



LONDON @ Stratford College
SINGAPORE @ COLUMBIA BUSINESS SCHOOL
MALAYSIA @ KLIUC University College
& to the top universities all over the world

Available Programmes
BSc - Bachelor of Computer Science
BBA - Bachelor of Business Administrations
BA - Bachelor in Hospitality Management
MSc- Master of Computer Science
MSc - MSc. in Strategic Business Information Technology
MSc - MSc. in Mobile Communication
MBA - Master of Business Administration
MBH - Master in Public Health
MEd - Master in Education Management
MPhil / Phd
UNIVERSITY OF Wales Lampeter Programme

BA(Hons) in Business Information Technology
IMIS & UNIVERSITY HERTFORDSHIRE PROGRAMME
BSc(Hons) in Computer Science
IAM & Oxford Brooke University Programme
BA (Hons) in Stragic Administrative Management
University of London (External Degree Programmes)
LLB - Bachelor of Laws
LLM - Master of Laws
Engineering Programme
Medicine

January Intake going on

**BIHS**
British Institute of Higher Studies International (Pvt) Ltd.
World Class Education
No.15, 1st Floor, 33rd Lane, Wellawatte, Colombo-06.
Tel : 011 2361887, 011 5667299 Fax : 011 5667476
Web : www.bihseducation.com

நீங்கள் உங்கள் குழந்தைக்கு ஓர் ஆரோக்கியமான, மதிநுட்பத்துடன் கூடிய எதிர்காலமொன்றை பெற்றுக்கொடுக்கின்றீர்களா ?


**Cow & Gate**
**Step-Up 3**

AA, DHA மற்றும் FOS என்பன வயிற்றுப் பகுதி தொற்றுநோய்களை கட்டுப்படுத்துவதுடன் மூளை மற்றும் கண் விருத்திகளுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றது.

AA மற்றும் DHA என்றால் என்ன ? [illegible]

FOS என்றால் என்ன ? [illegible] FOS (Fructo Oligo Saccharides) [illegible]






# தகவல் தொழில்நுட்பத்துறையில்

# சர்வதேச அங்கீகாரம் பெற்ற (BTEC HND)

# தகைமையை வழங்கும் நிறுவனம்

IIS நிறுவனமானது பிரிட்டனின் Edexcel இனால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பயிற்சி மையமாகும். Edexcel என்பது லண்டன் ஜி.சி.ஈ.சாதாரண தரம் மற்றும் ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சைகளுக்கான உலகளாவிய ஆளுநர் சபையாகும். இவ்வமைப்பு உலகலாவிய ரீதியில் தொழல்சார் வல்லுநர்களை உருவாக்குவதற்கென, தமது அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி மையங்களினூடாக BTEC Higher National Diploma பயிற்சி நெறிகளை நடத்தி வருகிறது. BTEC HND (Higher National Diploma) என்பது கணனித் துறையில் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட உயர்தரப் பயிற்சி நெறியாகும். BTEC HND பட்டமானது சர்வதேச அங்கீகாரம் பெற்ற பட்டமாகும்.

IIS இல் நடத்தப்படும் BTEC HND கற்கை நெறியில் இணைந்து கொள்வதில் யாழ்.குடாநாட்டு மாணவர்கள் பெரிதும் அக்கறை காட்டி வருகின்றனர். அறிவுத்துறை சார்ந்ததும், தொழில்துறை சார்ந்ததுமான கணனித் திறன்களை மாணவருக்கு இக் கற்கை நெறி வழங்குகின்றது. இக் கற்கை நெறியினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து கொள்ளும் மாணவர்கள் தமது பட்டக் கல்வியின் இறுதி ஆண்டினைப் பிரிட்டன், ஐக்கிய அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களின் B.Sc (Hons) இறுதி ஆண்டு மாணவராகச் சேர்ந்து பட்டப்படிப்பை மேற்கொள்ளலாம். அல்லது இலங்கையிலுள்ள சர்வதேசப் பல்கலைக் கழகங்களின் பயிற்சி மையங்களிலோ அல்லது கொழும்பிலுள்ள Sri Lanka Institute of Information Technology (SLIIT) நிறுவனத்திலோ தொடர்வதற்கான வாய்ப்பினை IIS நிறுவனம் ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

BTEC HND பட்டம் இரண்டு வருட கற்விப் போதனையைக் கொண்டது. இப் பயிற்சியின் முடிவில் BTEC HND பட்டம் பிரித்தானியாவின் Edexscl நிறுவனத்தில் இருந்து தரப்படுவதுடன் தகவல் தொழில்நுட்ப உலகில் எதிர்காலத்தைத் தேடும் க.பொ.த.உயர்தர மாணவர்களுக்கு இது மிகவும் பொருத்தமானது. க.பொ.த.உயர்தரத்தில் குறைந்தது இரண்டு பாடத்திலாவது சித்தி பெற்றிருப்பது இப் பயிற்சியை பெறுவதற்கான அடிப்படைத் தகுதியாகும்.

அது மட்டுமல்ல பிரித்தானியப் பல்கலைக்கழகங்களில் கணனி விஞ்ஞானத்தில் B.Sc. சிறப்புப் பயிற்சிக்கான காலத்தில் இரு ஆண்டுகள் விலக்குப் பெறுவர். அத்துடன் பிரித்தானிய கணனி சங்கத்தின் (BCS) பரீட்சைகளில் இருந்தும் விலக்கு அளிக்கப்படும்.

இந்த HND கற்கை நெறியினை மாணவர்களின் தேவைக்கும் வசதிக்கும் ஏற்ப மூன்று வேறுபட்ட துறைகளில் IIS வழங்குகின்றது.

1. Higher National Diploma in Computing
2. Higher National Diploma in Software Engineering
3. Higher National Diploma in Business Information Technology

மேற்படிக் கற்கை நெறியானது உலகளாவிய தகவல் தொழில்நுட்பத்தில் முன்னணி வகிக்கும் பல்வேறு சர்வதேச நிறுவனங்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பயிற்சிநெறியாகும்.

மாணவர்கள் தமது சொந்த இடத்திலேயே பெற்றோரின் பாதுகாப்பில் இச் சர்வதேச தரம் வாய்ந்த HND கற்கை நெறியினைப் பயில்வதற்கான வாய்ப்பு அமைந்திருப்பதாக ஒரு வரப்பிரசாதம் ஆகும். ✱

## விற்பனைக்கு

புதிய அசீபர் மோட்டார் சைக்கிள், குளிர் சாதனப் பெட்டி மற்றும் ஆட்டுக்கடாய் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 21, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம். (68906)

## இறைச்சிக்கோழி

3Kg விற்கு மேற்பட்ட புறொயிலர் 1Kg 450/-, சுத்தம் செய்தது 650/-. வியாபாரிகளுக்கு விலை குறைக்கப்படும். (சுத்தம் செய்தல் இலவசம்)
1. NEW R.S.K FARM- மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில்.
2. NEW R.S.K FARM- கே.கே.எஸ். வீதி, சுன்னாகம். (கொமர்சல் வங்கி அருகில்) (68707)

## மணமகன் தேவை

வடமராட்சியைச் சேர்ந்த, 1972 இல் பிறந்த, 5'2" உயரமுடைய மெல்லிய, இளமைத் தோற்றமுடைய மகம் நான்காம் பாதம் (7 இல் சனி), மூன்று சுற்று மொத்த கிரகப்பாவம் - 20, தனியார் கல்வி நிறுவன ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றும் மணமகளுக்கு பெற்றோர் படித்த அரச, தனியார் நிறுவனங்களில் கடமையாற்றும் மணமகனை எதிர்பார்க்கின்றார்கள். (சைவ போசனம் விரும்பத்தக்கது)
தொடர்பு:- 021 226 6404,
(இரவு 7 மணிக்குப் பின்) 021 226 3907. (68949)

## கிறிஸ்தவ, ஐயப்ப பக்தர்களுக்கு

புதிதாகத் தருவிக்கப்பட்ட
★ கிறிஸ்மஸ் பாடல்கள்
★ ஐயப்பன் பாடல்கள்
★ புதிய ஆங்கில, தமிழ் D.V.D க்கள்
★ இடைக்கால தமிழ்த் திரைப்படங்கள்

**கவிதாஸ் சி.டி.சென்ரர்**
இல.127/12. யூபிலி பஜார் (சிமாட்டி உட்புறம்),
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி.021 4590579 (68957)

## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
**நல்லூர் பாம் சென்ரர்,**
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (68844)

## தேவை

சுன்னாகம், நல்லூர், மானிப்பாய், சுழிபுரம் ஆகிய இடங்களில் உள்ள பாலர் பாடசாலைக்கு ஆங்கில, தமிழ் அறிவுடைய G.C.E O/L மற்றும் G.C.E. A/L கற்ற பயிற்சி ஆசிரியைகள், ஆசிரியைகள் தேவை. சுயவிவரக் கோவையுடன் [illegible] யாழ்ப்பாணம். (68910)

## கொக்குவில் இந்துக் கல்லூரி
## பழைய மாணவர் சங்கம்
## விசேட பொதுக்கூட்டம்

காலம் : 23.12.2007 ஞாயிறு மு.ப.10 மணி
இடம்: பஞ்சலிங்கம் கேட்போர் கூடம்
விடயம்: நம்பிக்கை நிதியம் யாப்பு விதி சம்பந்தமாக ஆராய்தல்

சகல பழைய மாணவர் சங்க அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு தயவுடன் வேண்டிக் கொள்கிறோம்.

இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய மாணவர் சங்கம்
கொக்குவில் இந்துக் கல்லூரி,
கொக்குவில். (சி/54691)

**தம்பிஐயா தேவராஜா**
பொதுச் செயலாளர்.

## அறிவித்தல்

வடக்கு மாகாண சபையின் பொது நிர்வாக அமைச்சுக்குக் கிடைத்த ஓய்வுபெற்ற அரச ஊழியர்களது ஓய்வூதியம் அவர்களுக்குரிய சொத்தழிவுக்கான நட்டஈடு உட்பட அனைத்தும் நிலுவையின்றி தீர்வுகண்டு உரிய அமைச்சுகளுக்கும் நிறுவனங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண சபையில் வேலை செய்து ஓய்வுபெற்றவர்கள், இதுவரை ஒரு மாதத்திற்குள் தங்களது ஓய்வூதியம் கிடைக்காதவர்கள் உடனடியாகத் தங்களது பெயர், விலாசம், ஓய்வு பெற்றபோது வகித்த பதவி, திணைக்களம், ஓய்வூதியம் பெற்ற திகதி, ஓய்வூதியத்திற்கு விண்ணப்பித்த திகதி ஆகிய விவரங்களுடன் எமக்குக் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

வட மாகாண சபை,
வரோதயநகர்,
திருகோணமலை. (சி/54711)

**சி.ரங்கராஜா**
பிரதம செயலாளர்.

## 2008 ஆம் ஆண்டிற்கான அனுமதிகள்




சர்வதேச தரத்திலான ஆங்கிலத்துடன் தமிழிலும்
**பாலர் பாடசாலை**

கற்பித்தல் முறை
- சர்வதேசத்தில் அங்கீகரிக்கப்பட்ட Dr.Maria Montessori & Canadian Early Learning Method
- ஆங்கில மொழியில் சர்வதேச தரத்திற்கேற்ற பாடத்திட்டம்
- தமிழ்மொழி கட்டாய பாடம்

Play Group - 2 - 3 years
Montessori - 3 - 4 years
Pre-school - 4 - 5 years

விசேட நிகழ்ச்சிகள்
• English Concert • முத்தமிழ் விழா • ஒளி விழா • பட்டமளிப்பு விழா • மாணவர் சித்திரம்/கைவேலை கண்காட்சி • Sports Meet

பாடசாலைகள் **BRITISH BUSINESS SCHOOL**

| | |
|---|---|
| நல்லூர் | 140, Temple Road, Jaffna. |
| சுன்னாகம் | Lakshmi Cottage, K.K.S. Road, Mallakam. |
| மானிப்பாய் | 252, ஆலடிச் சந்தி, Jaffna Road, Manipay. |
| பதேலாலி | Sri Pathmanathan Illam, Manthikai. |

Tel : 021-222-5796

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதனைச்சுடர்

''வேதனைச் சுடர்'' சிறுகதையின் ஆசிரியர் சு.இராஜநாயகன்.
மறுமலர்ச்சி காலத்து எழுத்தாளர். ''விழிப்பு'' என்ற பரிசுக் கதையின் மூலம் அறிமுகமானவர். ஈழத்துச் சிறுகதை மூலவர்களில் ஒருவரான சம்பந்தனைக் குருவாகக் கொண்டவர்.
மறுமலர்ச்சி, ஈழகேசரி, கலைச்செல்வி மற்றும் ஈழநாடு, தினகரன், விரகேசரி ஆகியவற்றில் சிறுகதைகளை எழுதியுள்ளார். இவர் நாவல்களையும் படைத்திருக்கிறார். சிறந்த கவிஞருமாவார். திருநெல்வேலி பரமேஸ்வரக் கல்லூரியில் ஆசிரியராகப் பணி புரிந்தவர்.
''சிற்பி'' தொகுத்தளித்த ஈழத்துச் சிறுகதைகள் மற்றும் மறுமலர்ச்சி சிறுகதைகளின் தொகுப்பிலும் இவரது கதைகள் இடம்பிடித்துள்ளன.
சமூக அநீதிகளுக்கு எதிரான கருப்பொருளைக் கொண்டே இவரது சிறுகதைகள் பலவும் அமைந்துள்ளன.

''பொய்யான விபரம் எதையுமே, என்னை ஏமாற்றும் நோக்கமாக, அவள் சொல்லவில்லை'' என்று சிந்தனை சிதறும் நிலை யில், மற்றவர்களின் வரம்பற்ற பேச்சுக்களுக்கு வரம்பு கட்டும் தீர்க்கத்தோடு, கையிலிருந்த கடிதமொன்றைக் கிழித்துக் கசக்கி எறிந்து கொண்டே, நிதானமாக, ஆனால் கொஞ்சம் பலமாகத் தலைமை ஆசிரியை சொன்னாள்.

முறுக்கேறிய நூலிழை அறுந்துவிடத் தயாராக இருப்பதுபோல, முறுக்கேறி- சூடேறியிருந்த ஆசிரியை ஒருத்தி, ஆசனத்திலிருந்து எழுந்துகொண்டே ''வழக்கத்துக்கு விரோதமான ஒன்றைச் செய்தபோது நீங்கள் எங்களையும் கலந்து ஆலோசித்திருக்க வேண்டும் என்பதே எங்களுடைய அபிப்பிராயம்'' என்று விவாதத்தை முடித்து விடுகிற பாவனையிற் கூறினாள்.

மற்றைய ஆசிரியைகளும் அதை ஒத் துக்கொள்ளுகிற மாதிரியில். மௌனமாய், தலைமை ஆசிரியையின் பதிலுக்காக, அவள் முகத்தைப் பார்த்தார்கள்.

சாந்தமும் அமைதியும் அணிகுலைகிற நிலைமையிலே தலைமை ஆசிரியை தலையை நிமிர்த்தி, ''எனக்கிருக்கிற விசேஷ அதிகாரத்தைப் பிரயோகிக்கிற அளவுக்கு என்னைப் போக விடமாட்டீர்கள் என்ற நம்பிக்கையை இன்னும் நான் இழந்து விடவில்லை!'' என்றாள்.

மற்றவர்கள் பரபரப்படைந்து, பேசாமடைந்தைகளாய்த் தலைமை ஆசிரியையே பார்த்தார்கள்.

''அவள் உள்ளதை உள்ளபடி சொல்லித் தான் அனுமதி பெற்றாள். நான் பார்த்த அளவிலேயே அவளது திறமையைப்பற்றி நல்லபிப்பிராயம் கொண்டுவிட்டேன். அது என் பிழையா?''

இந்தத் தடவை அனைவரும் தலைமை ஆசிரியையின் வாயையே பார்த்தபடி இருந்தார்கள்.

''எல்லா மாணவிகளும் அவளோடு எவ்வளவு அன்பாக இருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா? அவள் ஏழையாக, பரம ஏழையாக இருக்கிறாள் என்பதற்காக அவளை ஒருத்தியுமே தள்ளி வைக்கவில்லை. சாப்பிடுகிற போது கூட, தன்னுடைய வட்டிலையோ, கிண்ணத்தையோ அவளுக்குக் கொடுக்க ஒவ்வொருத்தியும் சண்டையிட்டு முன்வருகிறதை நான் நேரிற் கண்டிருக்கிறேன்.''

இப்படி விளையாட்டுக் கருவி பெற்று தன் அபிலாஷையை நிறைவேற்றிக் கொண்ட குழந்தைபோலத் தலைமை ஆசிரியை சொல்லிக் கொண்டே போனாள்.

''சக மாணவிகள் அனைவருமே அவளிடம் காட்டும் அன்பும் மரியாதையுமே அவளது திறமைக்கு அறிகுறி. என்னிடம் சொன்னது போல, ஹரிஜன் வகுப்பைச் சேர்ந்தவள் என்று, வேறெவரிடமும் சொல்லக் கூடாது.'' இவ் வாறு நான் சொன்ன போது, அவள் 'ஏன்' என்று கேட்கும் தோரணையில் நிமிர்ந்து பார்த் தாள். நான் அவளுக்கு தாக்கமில்லாதபடி, சரஸமாய், 'ஏன் என்று பிறகு சொல்லுகிறேன்' என்று சொல்லிவைத்தேன்.

''இக் குறுகிய கால எல்லைக்குள் அவள் அனைவரதும் மதிப்பையும் பெற்று விட்டாள். இப்பொழுது அவளைப் பற்றிய உண்மையைச் சொல்வதால் மாற்றம் எதுவும் ஏற்படாது என்று எண்ணி, ஆனாலும் பயந்து கொண்டே தான், இன்றைய பிரார்த்தனைக் கூட்டத்தில் அவளைப்பற்றிச் சொன்னேன். உங்களிடம் மாற்றம் ஏற்பட்டிருக்கிறதேயன்றி, மாணவிகளிடம் ஏதாவது மாற்றம் ஏற்பட்ட தாகத் தெரியவில்லை.''

''தயவு செய்து அவளையும் மற்றவர்களைப்போலவே நடத்தவேண்டும் என்று உங்களை வேண்டுகிறேன். நமஸ்காரம்.''

''நமஸ்காரம்''

* * *

கணீர்............

வேகமாக, மிக வேகமாக, ஜன்னலினூடே பறந்துவந்த கண்ணாடி 'டம்ளர்' ஒன்று, எதிரேயிருந்த சுவரில் மோதி, அடித்தளமற்ற கற்பனை போல, உடைந்து சிதறிற்று. அதைத்தொடர்ந்து ஒன்று, இரண்டு, மூன் று,........ எத்தனையோ 'டம்ளர்'கள் சுவருக்கு ஊறு செய்து, உருவழிந்து சில்லம் சில்லமாய், மெய்ப் பொருள் காணாது உருப்படியற்றிருக்கும் சிந்தனைகள் போலச் சிதறிச் சுவரோரத்திலே கிடந்தன.

மண்டபத்தினுள்ளே, பெண்களின் கூட்டம் ஒன்று , சமநிலை கெட்டு, விறுகொண்டோடும் பைத்தியங்கள் போல, பயப்படும் நிலையை அகங்காரம் போக்கிவிட, சாப்பாட்டு மண்டபத்தை அடுத்திருக்கும் கோப் பைகள் வைக்கும் தட்டை நோக்கி ஓடி, அதை மோதி விழுத்திப் பயங்கரமான சப்தத்தோடு அழிவு செய்த போது மண்டபத்தின் எதிர்க்கோணத்திலே தன்னருகில் நின்ற கண்ணம்மாவைச் சரஸ்வதி பிடித்திழுத்துக் கொண்டு தன்னறைக்குள் சென்று கதவைச் சாத்திப் பூட்டினாள்.

நல்லவேளை, தலைமை ஆசிரியை எங்கோ போயிருந்தாள். வெளியே, அகங்காரம் கொண்டவர்களின் மனத்திடைத் தோன்றிய கலவரம் பிரளயமாய், அவர்களின் மனத்தையே பிய்த்துப் பிடுங்கி, அடிபட்ட நாகபாம்பின் ஆணவங்கொண்ட துடிப்புப்போல, நிதானமற்று நிலைமை கெட்டு, எல்லாப்பண்புகளிலும் எதிர்மறை தழுவி வளர்ந்து, வளர்ந்து கொண்டே இருந்தது.

உள்ளே, சரஸ்வதியின் அறையில், வெதும்புகிற மனப்புழுக்கம் அனுச்சுழற்சி போல் அலைச்சல் கொடுக்க, முகத்தில் வேதனைத் தீச்சுடர நின்ற கண்ணம்மாவைச் சரஸ்வதி அணைத்து, 'இரு' என்று இருத்தி னாள்.

சுயநலம் பிடித்தவர்கள்; அவர்கள் சரஸ்வதியின் அறைக்கு வெளியே வந்து நின்று கொண்டு ஏளனமாக, எலும்பற்ற நாக்கினால் தீவிரமான புரட்சி காட்டி, உள்ளே இருக்கும் இரண்டு உயிர்களை உலைத்து விடும் வசைமொழிகளை, சொந்தச் சரக்கைக் கொண்டு சிங்காரித்த உண்மையைத் தான் , கொட்டினார்கள்.

ஏளனச் சிரிப்பினொலி திரண்டு, மண்டபத்தை அசைத்துவிடும் பலம் பெற்று, அறைக் கதவை உதைத்து ரகளை செய்யுமாறு அவர்களைத் தூண்டியபோது, ஒருத்தி, பொறுமையற்ற துணிச்சலோடு, உச்சஸ்தாயியிலே, ''தீண்டாதாள் கண்ணம்மா ஒழிக!'' என்று கோஷித்தாள்.

'ஒழிக' கோஷம் எல்லார் வாயிலிருந்தும் உக்கிரத்தோடு பிறந்து உச்சிவானைத் தொட்டது.

கண்ணம்மாவின் கொதித்த முகத்தைக் கண்டதே சரஸ்வதியின் கண்கள் உதிரம் துளித்தன. அவள் ஆவேசத்தோடு, உயிரை வெறுக்கும் நிலையிலேற்படும் பேராவேசத்தோடு, திடீரென்று கதவைத் திறந்து வெளியேவந்து, ''உங்களுக்கு இப்பொழுது என்ன வேண்டும்?'' என்று காளி போலக் கர்ச்சித்தாள்.

வாயடைத்து நின்ற அந்தக் கும்பலில் அத்தனை பெண்களுமே சரஸ்வதியைக் கண்டு நடுங்கினார்கள்.

திடீரென்று அமைதி கொண்டு, சாந்தம் தழுவும் முகத்தோடு அவள் அவர்களைப் பார்த்து, ''தயவு செய்து போய்விடுங்கள்'' என்றாள்.

வெட்கம் இரக்கமின்றிப் பிடுங்கித் தின்ன, குற்றமுள்ள நெஞ்சு தலையைத் தாழ்த்திக் குனியச்செய்ய, கூனிக்குறுகிய மனப்பண்போடு ஒருத்தியாய் ஒருத்தி போய், மறைவிடத்திலே, வேறொருத்தியோடு சேர்ந்து ஏதோ பேசிக்கொண்டாள்.

★ ★ ★

தலைமை ஆசிரியை வந்து தனது அறையில் நுழைந்ததுமே, கலாசாலை 'மேட்ரன்' அன்று மாலை நடந்த ரகளையை அப்படி அப்படியே சொல்லிவைத்தாள்.

முகமிருண்டு, நம்பிக்கை மயானத்துச் சாம்பலாய்த் தோல்வியை இடித்திடித்துக் காட்ட, கனவு நிலையில் தலைமை ஆசிரியை புறப்பட்டு, விடுதிச் சாலையை நோக்கி ஆத்திரமாய் நடந்தாள்.

சிணுங்கிய மழை, வானத்தை ஊடறுத்து வந்த நிலவொளி பச்சை மரங்களுக்குப் பைசாச உருக்கொடுத்து, தலைமை ஆசிரியை நினைவில் இருளைக் குவித்து மெதுவாக நகைத்தது.

சாப்பாட்டு விடுதியைக் கடந்து, சயன விடுதிக்குப் போகிற வழியிலே, பிரார்த்தனைக் கூடத்தில், ஒற்றை அகலின் சிறுவெளிச்சத்தில் இரண்டு மாணவிகள், நிற்பது தெரிந்தது. தலைமை ஆசிரியை சப்தமின்றிச் சமீபத்தில் போய்நின்று பார்த்தாள்.

அவள், சரஸ்வதி, கண்ணம்மாவின் அணைப்பில் நின்று கொண்டு, அவள் கூறுவதைக் கேட்கலானாள்.

''மூடராகவே வாழப் பிறந்தவர்கள் அதை நினைத்து அழாமலிருக்கிறார்கள். புத்திசாலியாய், உலகத்துக்கும் அவர்களுக்கும் தொண்டு செய்யப்பிறந்த நீ, இப்படி அழுவதுதானா முன்னேற்றத்தின் அறிகுறி?''

இப்படிக் கண்ணம்மா பேசி விம்மினாள். அவளால் அழாமலிருக்க முடியவில்லை.

தலைமை ஆசிரியை உணர்ச்சிப் பிழம்பாய் ஓடிச்சென்று இருவரையும் தழுவிக் கொண்டாள்.

''சமநிலை பெறும்போதுதான் மனிதன் தேவனாகிறான் என்று சொல்வது போல அவளது கண்களில் நீர் வழிந்தது. ★

(நன்றி:ஈழகேசரி சிறுகதைகள்)

# மரங்களின் பயன் பெரிது...... மகிமை பெரிது! ஆலயத் தேரைவிட அதற்கு மதிப்பளித்த மன்னன்



இது 200 ஆண்டுகளுக்கு முன் நடந்த ஓர் உண்மை நிகழ்ச்சி. அப்போது சிவகங்கை சமஸ்தானத் துக்குத் தலைவராக இருந்தவர் மருதபாண்டியர்.

அவர் காளையார் கோயிலுக்கு ஒரு பெரிய தேர் செய்ய ஆசைப்பட்டார். அதற்கு வேண்டிய பொருள்களை எல்லாம் சேகரித்தார். சிற்பிகளை வரவழைத்தார்.

கடைசியாக அந்தத் தேரின் அச்சுக்கு - பொருத்தமான ஒருமரம் எங்கே கிடைக்கும் என்று தேடினார்.

அவரது ஆட்சிக்கு உட்பட்ட திருப்பூவனத்தில் வகையாற்றுக்குத் தென் கரையில் உள்ள ஆலயத்துக்கு எதிரில் பழமையான பெரிய மருதமரம் ஒன்று இருப்பதைக் கேள்விப்பட்டார்.

அதை வெட்டியனுப்பும்படி அங்கேயுள்ள அதிகாரிகளுக்கு உத்தரவு அனுப்பினார். அதிகாரிகள் உடனே அதற்கான ஆள்களுடன் போய் அந்த மரத்தை வெட்ட ஆரம்பித்தார்கள்.

இதை அறிந்தவுடனே திருப்பூவன நாதருக்குப் பூஜைசெய்து வந்த ஆதிசைவர்களுள் ஒருவரான புஸ்பவன குருக்கள் ஓடிவந்து, 'அந்த மரத்தை வெட்டாதீர்கள்' என்றார்.

'இதுமன்னர்உத்தரவு'என்றார்கள்அதிகாரிகள்.

'அந்த மன்னர் மீது ஆணை, இதை நீங்கள் வெட்டக் கூடாது!' என்றார் அவர்.

அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. உடனே இதை மன்னருக்குத் தெரிவித்தார்கள்.

இதைக் கேட்டதும் மன்னருக்கு வியப்பு! உடனே அவரே புறப்பட்டு நேரில் அங்கே சென்றார். யார் மரம் வெட்டுவதைத் தடுத்தது? என்றார் மன்னர்.

குருக்கள் உங்களுக்குப் பயந்து மதுரைக்குப் போய்விட்டார் என்றார்கள் அதிகாரிகள். குருக்களுக்கு மன்னர் ஓர் அபய நிருபம் எழுதி அனுப்பினார். அக்காலத்தில் குற்றவாளிகளுக்கோ அல்லது பயந்தோடியவர்களுக்கோ பயப்படவேண்டாம். இங்கே வந்தால் உங்களுக்கு ஒரு துன்பமும் நேராது என்று அரசர்கள் அனுப்பிவைக்கும் கடிதத்திற்கு அபயநிருபம் என்று பெயர்.

அதைக் கண்டதும் குருக்கள் தைரியமடைந்து திரும்பிவந்தார். மன்னர் கோபப்படாமல் ஐயா அந்த மரத்தை வெட்ட வேண்டாம் என்று நீங்கள் தடுத்தீர்களா? என்றார்.

ஆமாம்! - குருக்கள்

'காளையார் கோயில் தேர் வேலைக்காக அதை வெட்டக் கூறியிருந்தேன். அப்படியிருக்கும் போது அதைநீங்கள் தடுக்கலாமா? என்றார் மன்னர்.

அதற்குச் சில காரணங்கள் உண்டு என்று குருக்கள் கூறினார்.

என்ன காரணங்கள்? எதுவாக இருந்தாலும்பயப்படாமல்சொல்லலாம்என்றார்மன்னர்.

வெளியூர்களில் இருந்து இங்கு நிறையப்பேர் வருகின்றார்கள் அப்படிவருபவர்கள் ஆற்றில் குளித்துவிட்டு சுவாமி தரிசனம் செய்வார்கள். எப்போதும் இங்கு நீர் ஓடுவதில்லை. கோடையில் வடகரையோரமாகத்தான் சிறிது நீர் ஓடும். அப்போது அங்கே குளித்துவிட்டு சுடுமணலில் நடந்துவருபவர்கள் இந்த மரநிழலில் இளைப்பாறுவது வழக்கம். இந்த மரம் எத்தனையோ காலமக இங்கே இருக்கிறது. எவ்வளவோ பேர் இந்த நிழலில் இளைப்பாறி வருகிறார்கள். வயதானவர்கள், பெண்கள், குழந்தைகள், கர்ப்பிணிகள் வருகிறார்கள். இம்மரத்தை வெட்டினால் அவர்களெல்லாம் வெயிலில் தவிப்பார்கள்.

ஆனால் கோயில் தேருக்கு இந்த மரம் தான் வேண்டுமென்பது இல்லை. எவ்வளவோ பேருக்கு நிழலாக இம் மரம் இருக்கிறது. எல்லாவற்றையும் விட முக்கியமான ஒரு காரணம் மருதமரம் மன்னரது பெயரைத் தாங்கிக் கொண்டிருக்கிறது! இம் மரத்தைப் பார்க்கும்போது எனக்கு மன்னர் நினைவுதான் வரும் என்று குருக்கள் கூறினார்.

மருது பாண்டியர் நிமிர்ந்து அவரைப் பார்த்தார். சற்று யோசித்து நீங்கள் சொன்னது சரிதான் மரத்தை வெட்ட வேண்டாம் என்றார். மரம் வெட்டப்படவில்லை. தேருக்கு வேறு ஒரு மரம் கொண்டு வரப்பட்டது.

அகந்தை இல்லாத ஓர் அரசனால்தான்- தமது உத்தரவு தடுக்கப்படும் போதும் - அதில் உள்ள நியாயத்தைக் [illegible] மாற்ற முடியும்.

மருதுபாண்டியர் அப்படிப்பட்ட ஒரு சிறந்த மன்னர். ★

# இன்றைய நிலையில் நிவாரணங்கள் நிறுத்தப்படுவது பொருந்தமாட்டாது

## மக்கள் மன்றம்

'நிவாரணம் வழங்குவதால் மட்டும் வறுமையை ஒழித்துவிட முடியாது' என்ற தலைப்பில் 25.11.2007 அன்று ஓர் அன்பர் வறுமை ஒழிப்புத் திட்ட மேம்பாட்டின் அவசியம் பற்றி எழுதிய கட்டுரையை வாசித்தேன்.

வறுமை ஒழிக்கப்பட வேண்டிய ஒன்றுதான். தற்போதைய போர்க்காலச் சூழ்நிலையில் அரசு வழங்கும் நிவாரணப் பொருள்கள் நிறுத்தப்பட்டால் மக்கள் தமது அன்றாட தேவைகளுக்காக மிகவும் அல்லல்படவேண்டி நேரிடும். A -9 பாதை திறக்கப்பட்டால் மாத்திரமே அரசசார்பற்ற நிறுவனங்கள் மேற்கொள்ளும் உற்பத்திப் பெருக்கங்களுக்கான முயற்சிகள் சாத்தியமாகும். இன்றைய நிலையில் பசுவளர்ப்பை ஊக்குவிப்பதாயின் அவற்றின் உணவுப் பொருள்களின் விலை என்ன? விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் விலை வீழ்ச்சி எவ்வாறு அமைந்துள்ளது என்பவற்றைக் கவனத்திற் கொள்ள வேண்டும். வெங்காயச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் ஏறக்குறைய 10Kg அடங்கிய ஓர் முடிச்சை 30ரூபா விலைக்கு அதுவும் வாகனங்களில் ஏற்றித் தெருத்தெருவாக வெங்காயம் வேண்டுமா? வெங்காயம் வேண்டுமா? எனக் கூவி அழைத்து விற்பனை செய்வதனைக் காணக் கூடியதாகவுள்ளது. அவர்கள் இவ் உற்பத்தி மூலம் எவ்வளவு வருவாயைத்தான் பெறப்போகிறார்கள். மரவள்ளிச் செய்கையை எடுத்துக் கொண்டால் 1Kg 4 ரூபாவிலிருந்து 8 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. இச்செய்கையாளர்கள் இலாபமடைந்துள்ளார்களா? நஷ்டமடைந்துள்ளார்களா? என்பது அவரவருக்கே தெரியும். ''தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும்.''

கட்டட வேலைகளில் ஈடுபடுவோர் பலர் இன்று தொழில்முயற்சிக்கான பொருள்களின் விலை உயர்வு பொருள் தட்டுப்பாடு, மக்கள் அத்தகைய கட்டட அமைப்புகளில் ஈடுபடாமை போன்ற இன்னோரன்ன பிரச்சினைகள் காரணமாகத் தொழில்வாய்ப்பை இழந்துள்ளனர். இந்நிலையில் நிவாரணம் வழங்குதல் நிறுத்தப்பட்டால் அவர்களில் நிலை என்னாகும்.

எரிபொருள் விலை காரணமாக (School Service) புரியும் தனியார் வாகனங்கள் பாடசாலை மாணவர்களை ஏற்றி இறக்கும் செயல்களில் ஈடுபடுவோர் தொழில் வாய்ப்பை இழந்துள்ளனர். நாட்டின் ஏனைய பிரதேசங்களுக்குப் பொருள்களை ஏற்றி இறக்கும் வாகன உரிமையாளர்கள் கூலித் தொழிலாளர் போன்றோர் A -9 பாதை தடைப்பட்டதால் தொழில் வாய்ப்பை இழந்துள்ளனர்.

எந்த ஒரு பெற்றோரும் தன் பிள்ளைகள் நற் பிரஜைகளாக உருவாக வேண்டும் என்ற உயரிய நோக்கோடு செயற்படுவார்களே அல்லாமல் உண்மைக்குப் புறம்பான நிலையில் வறுமையைக் கருவியாகக் கொண்டு பிச்சை பெறவோ, அவர்களது பேனாபிடிக்கும் கரங்களை உழைக்கும் கரங்களாக மாற்றவோ விரும்ப மாட்டார்கள். அரசு தற்காலச் சுழ்நிலையில் மக்களுக்கான நிவாரண உதவிகளை நிறுத்துமானால் மட்டுமே விளைவு எதிர்மாறாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

கமநல சேவை நிலையங்கள் மூலம் நெற் செய்கை மேற்கொள்வோருக்கு வழங்கப்பட்டுள்ள மானிய விலை அடிப்படையிலான செயற்கைப் பசளை (உரம்) எவ்வகையான தரத்திலமைந்துள்ளது என்பதனை விவசாயிகளை அணுகி அறிந்தால் மட்டுமே புரியும் மானிய விலையில் பரப்பிற்கு 4Kg உரம் (யூரியா) வழங்கப்பட்டது. ஆனால் தரமான உரம் 2 Kg வழங்கியிருந்தால் கூட விவசாயிகள் கவலை கொள்ளமாட்டார்கள்.

வறுமைநிலை ஒழிக்கப்பட வேண்டிய ஒன்றுதான் மறுப்பதற்கில்லை ஆனால் A -9 பாதை திறக்கப்பட்டால் மட்டுமே அது சாத்தியமாகும். வகை தொகையின்றி உணவு மானியம் வழங்கப்படுவதாக அன்பர் குறிப்பிட்டார். கட்டங்கள் சில ஒன்றாக வழங்கப்படும்போது அவ்வாறு தெரிவது உண்மையே.

1Kg மீனின் விலை 600 ரூபாவிலிருந்து 800 ரூபா வரை விற்கப்படுகிறது. நிவாரணப் பொருள்களாக அரிசி, மா, சீனி, பருப்பு என்பனவையே வழங்கப்படுகிறது. இவைமட்டும் வாழ்க்கைக்கான செலவினத்தைப் பூர்த்தி செய்யப்போவதில்லை. வாழ்க்கைச் செலவினத்தைப் பூர்த்தி செய்யப்போவதில்லை. வாழ்க்கைச் செலவின் ஒரு பகுதியை மட்டுமே குறைப்பதாயுள்ளது. எனவே இதுவும் நிறுத்தப்படுமானால் அரச ஊதியம் அல்லது அரச ஓய்வூதியம் பெறுபவர்கள் தவிர்ந்த ஏனையோரால் யாது செய்யமுடியும்?

நவாலி. எஸ்.கே.சாமி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் 2008 கணிதப் பிரிவில் கல்வி கற்கும்
வி.உ.சஞ்ஜீவ் அவர்களின் தந்தை
**அரியபாலன் விக்டர் உதயகுமார்**
அவர்கள் 14.12.2007 அன்று காலமாகிவிட்டார். அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உயர்தர வகுப்பு மாணவர்கள், உயர்தர மாணவர் மன்றம்,
யா/கனகரத்தினம் ம.ம.வி.
(68986)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**முருகையா சுரேஸ்குமார்**




தோற்றம் 13.04.1968
மறைவு 07.12.2005

தோற்றம் மறைந்தாலும்
துயரங்கள் மறையவில்லை
காலம் மறைந்தாலும்
கவலைகள் மறையவில்லை
வாழும் காலங்கள் வரை
உங்கள் ஞாபகம் எம் மனதைவிட்டு அகலாது.

71, பெரியதம்பிரான் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (68975)

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி




அமரர்
**மாணிக்கம் செல்லையா**
(ஆபிரகாம்)

மண்ணில் 11.08.1933
விண்ணில் 16.12.2006

குடும்பத்தின் குல விளக்காய் எமது வாழ்வில் ஒளி தந்து
பாசத்தின் உறைவிடமாய் விளங்கிய பண்பான தலைவரே!
அணையாத ஜோதியாக எங்கள் இதயங்களில் வாழ்கிறது
உங்கள் நினைவுகள்
ஓர் ஆண்டு சென்றாலும் ஆறாது எம் துயரம்
ஆண்டவரின் பொற்பாதத்தில் வேண்டிக்கொள்கிறோம்.

54/21, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (68981)
குடும்பத்தினர்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 30.04.1934
மறைவு 20.12.2004

**அமரர் சொக்கலிங்கம் துரைஐயா**
(உரிமையாளர்: கமலா ஸ்ரோர்ஸ், சந்திரன் பான்சி பலஸ்)
திதி : 17.12.2007

எமது குடும்பத் தலைவர் சொக்கலிங்கம் துரைஐயா அவர்களின் நினைவாக ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள துரைஐயா மண்டபத்தில் நீரிழிவு கருத்தரங்கு இன்று (16.12.2007) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் 12 மணி வரை இடம்பெறும்.

இதனைத் தொடர்ந்து இலவசமாக சிறுகுறிஞ்சா உற்பத்திகளும் "நீரிழிவில் சிறு குறிஞ்சா" இறுவட்டும் (CD) வழங்கப்படும்.

சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை. (63254)
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## வீடு வாடகைக்கு

38/1, சோமசுந்தரம் அவனியூ, சுண்டிக்குளியில் சகல வசதிகளுடனும் வீடு வாடகைக்குண்டு. தொடர்புகொள்ளவும்.
(021 222 5964) (68984)

## மணமகன் தேவை

செவ்வாய் குற்றம் இல்லாத, லக்.4, சுற்றும் 14½ பாவம் உள்ள, 1981, ஆயிலியம் பெண்ணுக்கு பட்டதாரி உத்தியோகம் or வெளிநாட்டு P.R உள்ள மணமகன் தேவை. லண்டன், கனடா விரும்பத்தக்கது.
தொடர்பு: நேசன்,
T.Y.M.H.A முன்பாக, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி. 0774005968 (68973)

## மணமகள் தேவை

7 செவ்வாய் குற்றம் உள்ள, 1975, சுவாதி, 69 பாவம், சொந்த தொழில் செய்யும் மணமகனுக்கு ஏற்ற பெண் தேவை.
தொடர்பு: நேசன், T.Y.M.H.A முன்பாக, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. 0774005968
OR செல்வராசா (உமா), பிள்ளையார் கோயில் வீதி, ஏழாலை வடக்கு. (68972)

## மணமகள் தேவை

செவ்வாய் குற்றம் இல்லாத, 1967, ஆங்கில பட்டதாரி ஆசிரியருக்கு ஏற்ற பட்டதாரி உத்தியோகப் பெண் தேவை.
தொடர்பு: நேசன்,
T.Y.M.H.A முன்பாக,
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, 0774005968 (68972)

## மணமகள் தேவை

நகைத் தொழிலகம் வைத்திருக்கும் 1974, பூசம் ஆணுக்கு ஏற்ற பெண் தேவை.
தொடர்பு: நேசன், T.Y.M.H.A முன்பாக, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
OR செல்வராசா (உமா), பிள்ளையார் கோயில் வீதி, ஏழாலை வடக்கு. (68972)

## OFF- SET MACHINE FOR SALE

A3 அளவுடைய 'டேவிற்சன்' (Davidson 701 - D) ஓப் செற் மெஷின் விற்பனைக்கு உண்டு. 21, 22, 23 - 12 - 2007 ஆம் திகதிகளில் முற்பகல் 9.30 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை இயந்திரத்தைப் பார்வையிடலாம்.

மெஷினுக்கான தங்கள் விலைப் புள்ளியை (Quotation) 27-12-2007 ஆம் திகதிக்கு முன் எழுத்து மூலம் ஒட்டிய கடித உறையில் வைத்து வழங்கவும். தபால் மூலம் அனுப்புவதாயின் பதிவுத் தபாலாக Registered Letter அனுப்பவும்.

66, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.
சைவபரிபாலன சபை
தொலைபேசி : 021 - 222 7678

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,டிசெ.16
யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.(202)

### செயலமர்வு

யாழ்ப்பாணம்,டிசெ.16
தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான இரண்டு நாள் செயலமர்வு நாளையும் நாளை மறுதினமும் நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுடன் விருப்பமுள்ள இடைநிலைக் கல்வி ஆசிரியர்களும் பங்குபற்றலாம் என வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார். (202)


## MICRO COMPUTER ACADEMY
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY

நீண்டகால அனுபவமிக்க விரிவுரையாளர்களின் சேவையின் கீழ் மிகக் குறைந்த கட்டணத்தில்

- Diploma in Microsoft Office - 1000/=
- Diploma in Desktop Publishing - 1000/=
- Diploma in Graphics Designing - 1000/=
- Diploma in Computerized Accounting - 1000/=
- Diploma in Hardware Engineering - 1000/=
- Diploma in Web Designing - 1000/=
- Diploma in Internet Technology - 1000/=

Special Offer

- புதிவுக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.
- வரையறுக்கப்படாத செய்முறைப் பயிற்சிகள்.
- வசதிக்கேற்ப நேர ஒழுங்குகள்.
- பயிற்சியின் முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

காலம்: 3 மாதம்

2008 ஆம் ஆண்டினை வரவேற்குமுகமாக பயிற்சி நெறிக்கான கட்டணச் சலுகையை வழங்குவதற்கு முன்வந்துள்ளோம்!

328, 365, Stanley Road,
Aariyakulam Junction (Near DMI)
Jaffna. 021-2227866

ஆரம்பம்: 05.01.2008
புதிவுக் காலம் 06.12.07 - 23.12.07 வரை


## வாழ்த்துகிறோம்



கொக்குவில், கோண்டாவில் பிரிவிற்கு விவாக, இறப்பு, பிறப்பு (பதில்) பதிவாளராக நியமனம் பெற்றுள்ள எமது மதிப்பிற்குரிய
திருமதி **வரதலக்ஷ்மி சோமசூரியசிங்கம்**
அவர்களின் பணி நீண்டகாலம் மக்களுக்குக் கிடைக்க வேண்டுமென மன மகிழ்வோடு வாழ்த்துகிறோம்.

M.T.பாலகிருஷ்ணன் குடும்பம் (அளவெட்டி),
T.B.பாலமோகன் குடும்பம் (அரசடிப் பிள்ளையார் கோவிலடி, கோண்டாவில் கிழக்கு).
(68956)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 12 . 03 . 1938
மறைவு 24 . 12 . 2006

**அமரர் பொன்னுத்துரை நடராசா**
(ஆனைக்கோட்டை, வண்ணார்பண்ணை மேற்கு)

உயிர்தந்து வாழ்வுதந்த தெய்வத்திற்கு

வாழ்வு தந்த வரமே! தோளில் தூக்கி,
துயரம் தாங்கி எமை வளர்த்த கரமே!
வானளாவிய உயரம் வரை சிறகடிக்க
வழிகாட்டிச் சொரிந்த நுமரமே!
உங்கள் கொடியில் நாம் படர்ந்து
நம் கொடியில் போத்துவிட் தழைத்து
ஓராண்டு நினைவில்
போராடி விழுகிறது கண்ணீர்.
ஓம் சாந்தி!

(சி/54723) மனைவி, பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி இராசதுரை



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு - 15, மோதரையை வசிப்பிடமாகவும் கொண்ட சரஸ்வதி இராசதுரை 13.12.2007 வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் நாகமுத்து யோசேவ் - ராசமுத்து தம்பதியரின் அன்பு மகளும் சிவனடியார் - கண்மணி தம்பதியரின் அன்பு மருமகளும் இராசதுரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இரத்தினம்மா மற்றும் ஞானம், நடராசா, வடிவம்மா, செல்லமணி ஆகியோரின் சகோதரியும் யசீந்திரன் (லண்டன்), சுகீந்திரன் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயும் நிர்மலா (லண்டன்), யூடொக்சியா ஆகியோரின் மாமியும் யூடிற்றாவின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.12.2007) ஞாயிற்றுக்கிழமை 29/01, பழைய பூங்கா வீதியில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து பிற்பகல் 3 மணிக்கு எடுத்துச்செல்லப்பட்டு, பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

29/01, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம். (68982)
தகவல்: இ.சுகீந்திரன் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் இசை அல்பம்



■■■டகர்கள் புதிய இசை அல்பத்தை வெளியிடுவது ஒன்றும் பெரிய விடயமல்ல. ஆனால் ஒரு நாட்டின் அதிபராக இருப்பவர் இசை அல்பத்தை வெளியிடுவது என்பது வியப்புக்குரிய விடயம் தானே.

இந்தோனேஷிய அதிபர் தான் இப்படி புதிய பாடல்அல்பத்தை வெளியிட்டிருக்கிறார். அந்நாட்டின் அதிபரான யோதோயோனோ பாடிய காதல் மற்றும் ஆன்மீக பாடல் அடங்கிய அல்பமாக இந்த இசைத் தொகுப்பு வெளியாகி உள்ளது.

"உனக்காக ஏங்கும் நான்" எனும் தலைப்பின் கீழ் இந்த அல்பம் வெளியாகி உள்ளது. இதில் முன்னாள் இராணுவ தளபதியான யோதோயோனோ அதிபரான பிறகு எழுதிய 10 பாடல்கள் அடங்கி உள்ளன. தன்னுடைய பணிச்சுமைக்கு மத்தியில் நேரம் கிடைத்த போதெல்லாம் தானும் ஒரு சாதாரண மனிதன் தான் எனும் உணர்வை வெளிப்படுத்துவதற்காக இந்த பாடல்களை எழுதியதாக அதிபர் குறிப்பிட்டிருக்கிறார்.

தேர்தல் பிரசாரத்தின்போது கூட இவர் பாட்டுப்பாடி அசத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அதிசய சுவிங்கம்



ஆஹா அற்புதமான கண்டுபிடிப்பு என்று சொல்லக் கூடிய புதிய சுவிங்கத்தை பிரிட்டனைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கின்றனர். இந்த சுவிங்கத்தில் என்ன சிறப்பு என்றால் இது மென்று தின்று துப்பிய பிறகு எங்கேயும் ஒட்டிக்கொள்ளாது.

சுவிங்கத்தின் தன்மையே ஒட்டிக் கொள்வதுதானே. ஆனால் இந்த சுவிங்கமோ பாறை மீதோ, சுவரின் மீதோ ஒட்டிக் கொள்ளாதாம். இதன் மீது கால் வைப்பவர் மீதும் ஒட்டிக் கொள்ளாதாம்.

இரசாயன துறையின் புதிய யுக்தியை பயன்படுத்தி இந்த சுவிங்கத்தை தயார் செய்துள்ளனர். அடுத்த ஆண்டு முற்பகுதியில் இந்தச் சுவிங்கம் விற்பனைக்கு வரவாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

## பலதும் பத்தும்

# உள்ளே தள்ளிய எஸ்.எம்.எஸ்



வலியப் போய் வம்பில் மாட்டுவது என்று சொல்வது போல அமெரிக்க இளைஞர் ஒருவர் போதை வஸ்து பற்றி நண்பரிடம் விசாரிப்பதாக நினைத்து பொலிஸாருக்கு எஸ்.எம்.எஸ் அனுப்பி வசமாக மாட்டிக் கொண்டிருக்கிறார்.

சார்லஸ்டன் நகரை சேர்ந்த ஜோஷ்வா எனும் 19 வயது இளைஞர் போதை வஸ்து பற்றி விசாரிப்பதாக தனது நண்பருக்கு ஒரு எஸ்.எம்.எஸ் அனுப்பினாராம். ஆனால் எண்ணுக்குரிய செல்போன் தற்போது காவல் துறை அதிகாரி ஒருவரால் பயன்படுத்தப்படுவது அவருக்குத் தெரியாதாம். இதனால் அந்த காவல் துறை அதிகாரி அவரை தேடிக் கண்டுபிடித்து உள்ளே தள்ளி விட்டாராம். இப்போது வாலிபர், இனி எப்போதும் எஸ்.எம்.எஸ் மூலம் போதை வஸ்து பற்றி விசாரிக்க மாட்டேன் என்று புலம்பிக் கொண்டிருக்கிறாராம்.

# சூரியக் காரில் பூமி வலம்




இந்தோனேஷியாவில் நடைபெற்று வரும் பூமிவெப்பமாதல் தொடர்பான சர்வதேச மாநாட்டில் இளைஞர் ஒருவரின் கார் அனைவரது கவனத்தையும் ஈர்த்திருக்கிறது.

சுவிட்சர்லாந்து நாட்டை சேர்ந்த லூயிஸ் பால்மர் என்பவருடைய கார்தானாம் அது. பால்மர் அந்த காரில்தான் உலகை வலம் வந்து கொண்டிருக்கிறார். தற்போது அவர் சர்வதேச மாநாடு நடைபெறும் இந்தோனேஷியாவின் பாலித் தீவில் இருக்கிறார்.

அவருடைய காரில் என்ன விசேஷம் என்றால் அது சூரிய சக்தியால் இயங்கும் திறன் கொண்டதாகும். பெற்றோல் மற்றும் டீசல் பயன்பட்டால் சுற்றுச் சூழலுக்கு மாசு ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் அவர் 3 ஆண்டுகள் பாடுபட்டு இந்த சூரிய சக்தி காரை தயார் செய்திருக்கிறார்.

சுற்றுச் சூழல் மாசு படுவது குறித்து மாநாட்டில் பங்கேற்றவர்கள் விவாதிக்கும் நிலையில் இந்த சூரியசக்தி கார் அவர்களை பெரிதும் கவர்ந்துள்ளது. ஒரு துளி பெற்றோல் கூட இல்லாமல் உலகை வலம் வரும் முதல் கார் இது என்று சுவிட்சர்லாந்து இளைஞர் பால்மர் பெருமையோடு கூறுகிறார்.

# கைதிக்கு நஷ்டஈடு



நஷ்டஈடு கேட்கும் உரிமை வெளியே இருப்பவர்களுக்கு மட்டும்தான் உண்டா? உள்ளே இருப்பவர்களுக்கும் உண்டு என்று உணர்த்தியிருக்கிறார் இஸ்ரேல் நாட்டுக் கைதி ஒருவர்.

அந்தக் கைதி அடைக்கப்பட்டிருந்த சிறை போதிய காற்று வசதி இல்லாமல் இருந்ததோடு, ஜன்னல் பேழை உடைந்து காணப்பட்டது. அது மட்டுமன்றி அங்கே கரப்பான் பூச்சிகளின் தொல்லையும் அதிகமாக இருந்தது. இதையெல்லாம் குறிப்பிட்டு அவர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார்.

வழக்கை விசாரித்த நீதிபதி அவரது பரிதாப நிலையைக் கேள்விப்பட்டு, சிறை நிர்வாகம் அவருக்கு 1000 டொலர் நஷ்டஈடு வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

# கால் நாளங்களின் 'வால்வு'கள் பழுதுறுவதாலேயே அவற்றில் வீக்கமும் திரட்சியும் உண்டாகின்றன

## நோய் நிலைக்கு ஏற்ப சிகிச்சை பெறவேண்டும்

வினா 1: பெண் வயது 14, கால்களில் காணப்படும் நாளங்கள் வீங்குவதற்கான காரணங்கள் பற்றியும் அதனைத் தடுக்கும் வழிமுறைகள் பற்றியும் அறிய விரும்புகிறேன். தயவு செய்து பதில் தரவும்?

வினா 2: ஆண் வயது 23, எனக்கு இடது காலில் நரம்புகள் திரட்சியாகக் காணப்படுகின்றது. மேற்படி பிரச்சினைக்கு தீர்வுகாண நான் என்ன செய்ய வேண்டும்?

விடை: நீங்கள் குறிப்பிடும் அறிகுறிகளுக்கமைய பார்க்கும்போது இந்நிலைமையானது Varicose vein என அழைக்கப்படும் காலில் காணப்படும் நாளங்களில் ஏற்படும் பாதிப்பாக

சுகநலம்

இருக்க வேண்டும். முக்கியமாக இது நரம்புகளில் ஏற்படுவது என்பது தவறான கருத்தாகும். இது வினா 1 இல் குறிப்பிடப்பட்டிருந்ததுபோல நாளங்களிலேயே ஏற்படுகின்றது.

இந்நிலைமையானது நாளங்களில் சாதாரணமாகக் காணப்படும் வால்வுகள் பலவீனமடைவதால் ஏற்படுகின்றது. இவ்வால்வுகள் நமது கால்களில் குருதியைப் புவியீர்ப்பிற்கு எதிராக இதயத்தை நோக்கி செலுத்துவதில் பெரும்பங்கு வகிக்கின்றது. எனவே இவ்வால்வுகளில் பலவீனம் ஏற்படும்போது மேற்படி பொறிமுறை பாதிப்படைகின்றது. இதன் காரணமாக வழமைக்கு மாறாக குருதியானது கால்களில் உள்ள நாளங்களில் தேங்குவதால் கால்களில் நாளங்கள் விரிவடைந்து அவை நீளத்தில் அதிகரித்து திரட்சியாகக் காணப்படும். இவ்வாறான நிலைமையே நாளங்களில் ஏற்படும் வீக்கத்திற்கு காரணமாகும்.

இந்நிலைமையானது அதிகநேரம் நின்றபடி வேலைசெய்வோர்களிலும் (உதாரணமாக வயல்வேலை செய்வோர்) மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களிலும் ஏற்பட அதிக வாய்ப்புகள் உண்டு. இது பரம்பரை அலகுகள் காரணமாக சந்ததி வழி ஏற்படவும் சந்தர்ப்பம் உண்டு.

இதற்கு நீங்கள் வைத்தியம் செய்யாதவிடத்து இவ்வாறான திரட்சிகளில் புண்கள் ஏற்பட்டு இரத்தம் வெளியேறவும் சந்தர்ப்பம் உண்டு.

இவ்வாறான நிலமை காணப்படுவோர் (இரண்டாவது வினாவை வினவிய நபர்) ஓய்வாக இருக்கும்பொழுது உங்கள் கால்களை உயர்த்தி வைப்பதன் மூலமாகவோ அல்லது மீள்தன்மையுள்ள Stockings அல்லது சுற்றுத்துண்டை கீழிருந்து மேலாக அணிவதன் மூலமாகவும் நோயின் நிலமையை குறைத்துக் கொள்ளலாம.

இதற்கான சிகிச்சையானது நோய்நிலைக்கேற்ப ஊசி மூலம் மருந்து செலுத்துவதன் மூலமாகவோ சத்திரசிகிச்சை மூலமாகவோ மேற்கொள்ளப்படலாம். இதற்கு நீங்கள் தகுந்த ஒரு சத்திரசிகிச்சை நிபுணரை அணுகுவதன் மூலம் பொருத்தமான தீர்வைப் பெற்றுக்கொள்ளலாம்.

வினா 3 : பெண் வயது 21, எனக்கு வயிற்றில் புண் ஏற்பட்டிருக்கின்றது. இதற்கு வைத்திய ஆலோசனைப்படி நான் மருந்து சாப்பிட்டு வருகின்றேன். இவ்வாறான நிலைமை ஏன் ஏற்படுகின்றது என விளக்குவீர்களா?

விடை: நீங்கள் வயிற்றில் புண் ஏற்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டிருப்பது இரைப்பையில் அல்லது முன்குடலில் ஏற்படும் புண்ணாகத்தான் இருக்கவேண்டும். இரைப்பையில் அல்லது குடலில் புண் ஏற்பட பல

"மருத்துவ ஆலோசனை"
சமுதாய மருத்துவத்துறை,
மருத்துவ பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

வேறு காரணங்கள் உண்டு. சீராக நேரத்திற்கு உணவு உட்கொள்ளாமை, முன்குடலில் ஏற்படும் *Helicobacter pylori* எனப்படும் கிருமித்தொற்று, இரைப்பையில் சாதாரணமாக சுரக்கப்படும் HCl எனும் அமிலம் அசாதாரணமாக அதிகளவில் சுரத்தல் மற்றும் அதிகரித்த மனஅழுத்தம் போன்றவை இவற்றில் சில.

அத்துடன் மதுபானம் பாவித்தல், புகைத்தல், மற்றும் கார உணவு வகைகள், நோ, வலி என்பவற்றிற்குப் பாவிக்கும் சில மாத்திரைகள் இந்நோய் நிலமையை மேலும் அதிகரிக்கும்.

வினா 4: [illegible] தம் இருக்கின்றது. தயவுசெய்து ஆலோசனை தரவும்?

வினா 5: பெண் வயது 18, எனக்கு மூலப் பிரச்சனை இரு வருடங்களாக இருக்கின்றது. இதன் காரணமாக என்னால் ஒரு வேலையும் செய்யமுடியவில்லை. மூலவருத்தமானது இருமாதங்களுக்கு ஒருமுறை வருகின்றது. இப்படி வரும்போது மிகவும் வலிக்கிறது, நடக்கவோ, இருக்கவோ முடியாது. இதற்கான காரணம் என்ன? இதைத்தீர்க்க வழிமுறைகள் இருக்கின்றதா?

விடை : மூலவருத்தம் ஏற்படுவதற்கு உணவு முறையானது ஒரு முக்கிய காரணமாகும். இந்நோய் நிலமையைப் போதியளவு நீர்ப் பதார்த்தங்களைப் பருகுதல், கீரை வகை, மற்றைய இலை வகைகள், பழவகை போன்ற அதிகளவில் நார்ப்பொருள் காணப்படும் உணவு வகைகளை உள்ளெடுத்தல் போன்ற பழக்கங்களால் கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம். நோய்நிலமை கடுமையாக இருப்பின் சத்திர சிகிச்சை நிபுணரை அணுகவும். உங்கள் நோய் நிலைக்கு ஏற்ப ஊசி மருந்து மூலமாகவோ, Band ligation மூலமாகவோ, சத்திரசிகிச்சை மூலமாகவோ தகுந்த சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளலாம்.

வினா 6: ஆண் வயது 71, சர்க்கரை வியாதி உள்ளவர்களது காலில் அல்லது உடலின் ஏனைய பாகங்களில் சிறியளவில் காயங்கள் ஏற்பட்டவுடன் அது பெரிதாக மாறி, நாளடைவில் காலோடு சேர்த்து வெட்டுவது அல்லது ஏனைய உடற்பாகங்களுடன் சேர்த்து வெட்டுவது போன்ற நிலைமை ஏன் ஏற்படுகிறது?

விடை: இவ்வாறான சர்க்கரை வியாதி உள்ளவர்களது இரத்தக்குழாய்களில் அதிகளவில் கொழுப்புப் படிவு ஏற்படுகின்றது. இதனால் இப்படிவுகளுக்கு அப்பாலுள்ள உடற்பாகங்களுக்கான இரத்த ஓட்டம் குறைவடைந்து இறுதியில் முற்றாகத் துண்டிக்கப்படுகின்றது. இதன் காரணமாக பாதிக்கப்பட்ட பாகங்களுக்கான போசணைப் பதார்த்தங்களும் நோய்க்கிருமிகளுக்கு எதிராக உடற்கலங்களில் போராடும் தன்மையும் இழக்கப்படுகின்றது. இதனால் இவர்களுக்கு ஏற்படும் புண்கள் பெரிதாவதுடன், புண் ஏற்பட்ட பகுதிக்கு மேலுள்ள தசை, எலும்புப் பகுதிகளுக்கும் பரவுகின்றது. இதனால் உயிருக்கு ஆபத்தான நிலைமை ஏற்படும்பொழுது காலின் அல்லது உடற்பாகத்தின் பாதிக்கப்பட்ட பகுதி அகற்றப்படுகின்றது. மேற்படி இரத்த ஓட்டத்தில் தடை ஏற்படுவதால் உடற்பாகங்களில் ஏற்படும் பாதிப்பானது இரத்த ஓட்டம் இல்லாத காரணத்தினால் ஏற்படும் அழற்சி (Ischaemic gangrene) என அழைக்கப்படும்.

அத்துடன் சர்க்கரை வியாதி உள்ளவர்களுக்கு ஏற்படும் இரத்த ஓட்டப் பாதிப்பானது பாதிக்கப்பட்ட பகுதிகளில் நரம்புகளையும் தாக்குவதால் உணர்ச்சியற்ற தன்மையையும் ஏற்படுத்த வல்லதாகும். இந்த உணர்ச்சியற்ற தன்மையானது இந்நோய் ஏற்பட்டவர்களுக்கு அவர்களை அறியாமலேயே காயங்கள் ஏற்பட பிரதான காரணியாக அமைகிறது. இதன் காரணமாகவே இவர்களுக்கு பாதுகாப்பான காலணிகள் பரிந்துரைக்கப்படுவதுடன் கால்பற்றிய பாதுகாப்பான முறைகளும் அறிவுறுத்தப்படுகின்றது.

வினா 7: ஆண் வயது 17, எனது பின்பகுதியில் (பிட்டப்பகுதியில்) சிறு சிறு கொப்பளம் போல் ஏற்படுகின்றது. அது உடையும்பொழுது

உங்கள் கேள்விகளுக்கு
மருத்துவ நிபுணர்கள்
பதில் தருகிறார்கள்

இரத்தமும், சீதமும் வெளிவருகின்றது. இதற்குக் காரணம் என்ன? நான் என்ன செய்யவேண்டும்?

விடை : உங்களுக்கு ஏற்படும் கொப்பளங்கள் குதவாசலுக்கு அருகாமையில் இருப்பின் இதனை Sinus அல்லது Fistula என அழைப்பர். இந்நிலமையானது சீழ் (Pus) கட்டிகள் ஏற்படும்பொழுது சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்படாமையினால் ஏற்படுகின்றது. மலவாசலுக்கு அண்மையிலேற்படும் சீழ் கட்டிகளுக்கு தகுந்த முறையில் சிகிச்சையளிப்பது முக்கியமானதாகும். இவ்வாறான நிலைமைகள் காணப்படுவோர் ஒரு சத்திர சிகிச்சை நிபுணரை உடனடியாக நாடவேண்டியது மிக அவசியமாகும்.

கீழ்கண்ட முகவரிக்கு கடித மூலமாகவோ, தொலைபேசி எண்ணுக்கு SMS மூலமாகவோ தொடர்புகொண்டு உங்கள் வினாக்களை பதிவு செய்யலாம். அத்துடன் அருகில் காணப்படும் சின்னத்துடன் எம்மால் நிறுவப்பட்டுள்ள வினா சேகரிப்பு பெட்டிகளில் உங்கள் வினாக்களை இடுவதன் மூலமும் அவை எம்மை அடைவதை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். உங்கள் கேள்விகளும் பதில்களும் பிரதி ஞாயிறு தோறும் உங்கள் உதயனில் பிரசுரமாகும்..

*(உங்கள் வினாக்களில் வயது, பால் என்பன கட்டாயம் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.)*

*மருத்துவ ஆலோசனை*
மருத்துவபீடம், ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி. *T.P:0777 179268*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2011இல் உலகக் கிண்ணப் போட்டியை புதிய முறையில் நடத்துவதற்கு உடன்பாடு

**2011ஆம்** ஆண்டு உலகக் கிண்ணக் கிரிக் கெட் போட்டியை நடத்தும் முறை தொடர்பாகப் போட்டியை நடத்த உள்ள இந்தியா உள்ளிட்ட நாடுகளிடையே உடன்பாடு ஏற்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தை இந்தியா, பாகிஸ்தான், இலங்கை மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகள் இணைந்து நடத்துகின்றன.



இந்தப் போட்டிகளை நடத்தும் முறை தொடர்பாக, இந்த நான்கு நாடுகளிடையே ஒருமித்த கருத்து ஏற்பட்டிருப்பதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத்தலைவர் நக்மி தெரிவித்துள்ளார். 2003 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தைப் போல் 'சுப்பர் சிக்ஸ்' போட்டிகளைக் கொண்டிருக்காமல், இந்த உலகக் கிண்ணம் புதிய முறையைக் கொண்டிருக்கும். 14 அணிகள் இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவில் உள்ள அணிகளும் குறைந்தது 6 போட்டிகளில் ஆட வேண்டி இருக்கும்.

அதன்பிறகு 8 அணிகள் காலிறுதிக்குத் தகுதிபெறும். பங்கேற்கும் அனைத்து அணிகளுக்கும் காலிறுதிச் சுற்றுக்கு முன்னேற சமமான வாய்ப்பு அளிக்கப்படும் வகையில் இந்த போட்டி முறை தேர்வு செய்யப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதுபற்றி விரைவில் சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலோடு விவாதிக்கப்பட உள்ளது. இந்த ஆண்டு தொடக்கத்தில் மேற்கிந்திய தீவுகளில் நடைபெற்ற உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி அதிக நாள்கள் நடைபெற்றதாகவும் போட்டி அமைப்பு சுவாரஸ்யம் இல்லாமல் இருந்ததாகவும் விமர்சனம் எழுந்தது குறிப்பிடத்தக்கது.

### கிரிக்கெட்டுக்கு அங்கீகாரம்

சர்வதேச ஒலிம்பிக் குழு கிரிக்கெட்டுக்கு அங்கீகாரம் பெற்ற விளையாட்டு என்னும் அந்தஸ்தை வழங்கியுள்ளது. சுவிட்சர்லாந்து நாட்டில் சர்வதேச ஒலிம்பிக் குழுவின் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கிரிக்கெட்டுக்கு அங்கீகாரம் பெற்ற விளையாட்டு எனும் அந்தஸ்தை வழங்க முடிவு செய்யப் பட்டது.

இந்த அந்தஸ்தை கிரிக்கெட் இரண்டு ஆண்டுகளுக்கு அனுபவிக்கலாம் என்றும், 2009இற்குப் பி[illegible] இந்த அந்தஸ்து நிரந்தரமாக்கப்படலாம் [illegible]ன்றும் ஒலிம்பிக் குழு தெரிவித்துள்ளது.

ஒலிம்பிக் விளையாட்டில் இடம்பெறாத, ஆனால் குறிப்பிட்ட [illegible] சில நெறிமுறைகளை பூர்த்திசெய்யும் விளையாட்டுக்கு இத்தகைய அந்தஸ்து வழங்கப்படுகிறது.

### கேர்ஸ்டனின் சம்பளம் ஆண்டுக்கு 74 லட்சம்

இந்திய அணியின் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ள கெரி கேர்ஸ்டனுக்கு ஆண்டுக்கு ரூபா 74 லட்சம் (இந்திய நாணயப்படி) சம்பளம் வழங்கப்படவுள்ளதாக அந்நாட்டு கிரிக்கெட் சபை தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்திய அணியின் புதிய




பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ள 40 வயதான தென்னாபிரிக்க அணியின் முன்னாள் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கெரி கேர்ஸ்டன் இரண்டு ஆண்டுகளுக்குப் பயிற்சியாளராக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். சொந்த பணிகள் சில இருப்பதால், இந்த மாத இறுதியில் தொடங்கும் ஆஸ்திரேலிய தொடருக்குத் தன்னால் ஆலோசகராக மட்டுமே செயற்படமுடியும் என்று கேர்ஸ்டன் இந்திய கிரிக்கெட் சபையிடம் உறுதியாகக் கூறியிருப்பதையடுத்து அவரது முழுநேரப் பணி 2008ஆம் ஆண்டு மார்ச் முதலாம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளது.

முன்னாள் பயிற்சியாளர் கிரேக் சப்பலுக்கு வழங்கப்பட்டதைப் போன்று அதே அளவு ஊதியம் கேர்ஸ்டனுக்கும் வழங்கப்படவுள்ளது. இதன்படி ஆண்டுக்கு ஊதியமாக மட்டும் ரூபா 74 லட்சம் பெறுவார். இதுதவிர மேலும் பல சலுகைகளும் அவருக்குக் கிடைக்கும். ஆண்டு பயணக் கொடுப்பனவாக ரூபா 8.60 லட்சம் வழங்கப்படும். ஒவ்வொரு போட்டிக்கும் தினப்படியாக வீரர்களுக்கு எவ்வளவு அளிக்கப்படுமோ அதே அளவு பயிற்சியாளருக்கும் கொடுக்கப்படும்.

மேலும் அணியுடன் இருக்கும்போது தொலைத்தொடர்புக்காக நிர்ணயிக்கப்பட்ட செலவுத்தொகை, சட்டையில் விளம்பரச் சின்னம் அணிவதன் மூலம் கிடைக்கும் தொகை பகிர்வு ஆகியவையும் கேர்ஸ்டனுக்கு வழங்கப்படும். இவற்றை எல்லாம் கணக்கிட்டால் அவர் ஆண்டுக்கு ரூபா ஒரு கோடிக்கு மேல் இந்திய கிரிக்கெட் சபையிடமிருந்து பெறுவார்.

### டெய்ட் பந்தை எறிவதாகக் குற்றச்சாட்டு

ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் ஷான் டெய்ட் பந்தை வீசாமல், எறிவதாக நியூசிலாந்து அணித்தலைவர் டானியல் வெட்டோரி குற்றம்சாட்டியுள்ளார்.

நியூசிலாந்து அணிக்கு எதிராகப் பெர்த் மைதானத்தில் நடந்த இருபதுக்கு 20 போட்டியில் டெய்ட் 2 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு, படுவேகமாக பந்துகளை வீசினார். இதனையடுத்து நியூசிலாந்து அணித்தலைவர் வெட்டோரி, பயிற்சியாளர் பிரேஸ்வெல் ஆகியோர் டெய்ட்டின் பந்து வீசும் முறை மீது சந்தேகம் தெரிவித்தனர்.

டெய்ட் பந்தை வீசாமல், எறிவதால்தான் மணிக்கு 160 கி.மீ. வேகத்தில் அவரால் வீச முடிகிறது என வெட்டோரி அப்போது கூறினார்.

இந்நிலையில், வெட்டோரியின் இந்தக் குற்றச்சாட்டினால் கடும் கோபமடைந்துள்ள ஷான் டெய்ட் தாம் பரிசோதனைக்கு செல்லத் தயார் என்றும் ஆனால் குற்றம் சாட்டுபவர்கள் தனது பந்துகளை மேலும் கவனமாகக் கவனிப்பது அவசியம் என்றும் தெரிவித்துள்ளார்.



ஆனால் டெய்ட் பந்து வீச்சு குறித்து இதுவரை நியூசிலாந்து அணி நிர்வாகம் அதிகார பூர்வமாக புகார் எதையும் அளிக்கவில்லை என்று ஆட்ட நடுவர் ரொஷான் மகாநம தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தான் டெஸ்ட் அணிக்கு தலைவராக யூனிஸ்கான் விருப்பம்

### டெஸ்ட் கேப்டன் பதவி யூனுஸ்கான் விருப்பம்

பாகிஸ்தான் டெஸ்ட் கிரிக்கெட் அணி தலைவர் பதவியை ஏற்கத் தயாராக இருப்பதாக யூனுஸ்கான் தெரிவித்துள்ளார்.

சொகைப் மாலிக் தலைமையிலான பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டி தொடரில் விளையாடியது. பாகிஸ்தான் அணி ஒருநாள் போட்டித் தொடரை 2:3 என்ற கணக்கிலும் டெஸ்ட் தொடரை 0:1 என்ற கணக்கிலும் இழந்து நாடு திரும்பியது.

இரு போட்டியிலும் தொடரை இழந்ததால் பாகிஸ்தான் அணிக்கு எதிராக கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. அணித்தலைவர் மாலிக்குக்கு எதிராகவும் முன்னாள் வீரர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

## டிலான்

இந்த நிலையில் பாகிஸ்தான் அணி தலைவர் பொறுப்பை ஏற்க இரண்டு முறை மறுப்பு தெரிவித்த துணைத் தலைவர் யூனுஸ்கான், தற்போது திடீரென டெஸ்ட் அணித்தலைவர் பதவியை ஏற்கத் தயார் என்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக யூனுஸ்கான் கூறுகையில் பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் நான் டெஸ்ட் அணித்தலைவர் பொறுப்பை ஏற்கவேண்டும் என்ற விரும்பினால் அதனை நிறைவேற்ற நான் தயார். ஆனால் அதற்கு முன்பு நான் சபை நிர்வாகிகளுடன் சில விடயங்கள் குறித்து கலந்து பேசி முடிவு செய்ய வேண்டும்.

இந்தியச் சுற்றுப்பயணம் முக்கியமானது என்பதால் தான் துணைத் தலைவர் பதவியை ஏற்றேன். மற்ற எந்தப் போட்டியாக இருந்தாலும் ஏற்று இருக்கமாட்டேன். எனக்குப் பதவி வேண்டும் என்று நான் யாரிடமும் கேட்கவில்லை. என்ன செய்யவேண்டும் என்பதை சபை முடிவு செய்யும் என்றார். ★

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,டிசெ.16

அராலி தெற்கு மாவத்தை விளையாட்டுக் கழகம் உழவர் திருநாளையொட்டி வலிகாமம், யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக்குகளின் அனுசரணையுடன் நடத்தி வரும் 11 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு மாவத்தை விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

* அராலி சென். ஸ்டார் விளையாட்டுக் கழகம் எதிர் அராலி திருமகள் விளையாட்டுக் கழகம்
* அராலி பாரதி விளையாட்டுக் கழகம் எதிர் அராலி ஏ.எல் விளையாட்டுக் கழகம்.

### பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டங்கள்

* அராலி சில்வெஸ்டார் விளையாட்டுக் கழகம் எதிர் ஆனைக்கோட்டை யுத் யூனியன் விளையாட்டுக் கழகம்
* இளவாலை யங்கென்றீஸ் விளையாட்டுக்கழகம் எதிர் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம்.
* மானிப்பாய் றெட்றேஞ்சர் விளையாட்டுக் கழகம் எதிர் அராலி கலைவாணி விளையாட்டுக் கழகம்.

(50-86)

✱ ✱ ✱

வலி.வடக்கு,டிசெ.16

ஐந்து சுற்றுக்கள் கொண்ட கரப்பந்தாட்டப் போட்டியொன்று தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலத்திற்கு முன்பாக உள்ள மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

தெல்லிப்பழை பூமா விளையாட்டுக் கழகத்திற்கும் அளவெட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் இப்போட்டி இடம்பெறுகின்றது.

இப்போட்டியின் இரண்டாவது சுற்று இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. (50-86)

**யா/அருணோதயக் கல்லூரி**
**பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் - 2007**

இடம் : **கல்லூரி மண்டபம்**
காலம் : **23.12.2007 ஞாயிறு மு.ப 10 மணி**
விடயம் : புதிய நிர்வாகத் தெரிவு புதிய அங்கத்துவப் பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

**தலைவர்.** (அ/54725) **செயலாளர்.**

**கண்ணீர் அஞ்சலி**

எமது அன்பிற்குரிய
**வைத்திலிங்கம் துரைராசா**
அவர்களின் பிரிவினால் ஆழ்ந்த கவலையடைகிறோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"சாந்தநிகேதன்"
உடுவில் கிழக்கு,
சுன்னாகம். (68991)
கணேசரத்தினம் குடும்பம், அரவிந்தன் குடும்பம்,
சுரேஸ் குடும்பம் (கனடா), கண்ணன் குடும்பம்.

**மாபெரும் மலிவு விற்பனை**

வருட இறுதியை முன்னிட்டு விசேட கழிவுகளுடன் விற்பனையாகின்றன.
* Exercise walkers
* Leg Benches and other Benches
* Bars and wheels and Gym items
* விளையாட்டு உபகரணங்கள், சீருடைகள், பரிசுப்பொருள்கள்.

(68995)

**NEW POWER WORLD SPORTS CENTRE**
**திருநெல்வேலிச் சந்தி, யாழ்ப்பாணம்.**

**கண்ணீர் அஞ்சலி**

எமது மன்ற நிர்வாக சபை உறுப்பினரான
**சபாரத்தினம் இராசநாயகம்** அவர்களின்
பாசமிகு சகோதரரான
**சபாரட்ணம் கனகசபாபதி**
(குட்டிவாத்தியார் - கிராம அலுவலர் J/42 காரைநகர்)
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மாசாந்தியடைய எல்லாம் வல்ல ஈழத்து சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேசப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாக சபையினர், ஆசிரியர், மாணவர்கள்,
**கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்.** (68994)

**மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்**



எமது அன்புத்தந்தை
**அண்ணாவியார்**
**வஸ்தியாம்பிள்ளை யேக்கப்**
(அல்பிரட்)
அவர்கள் 15.12.2007 அன்று கொழும்பு ஜோ.த. சில்வா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற விருது வழங்கும் வைபவத்தில் **"கலா பூஷணம்"** விருதைப் பெற்றுக் கொண்டார். பல நாட்டுக் கூத்துக்களை அரங்கேற்றிய இவர் நடிப்பிலும் புகழ் பெற்றவர். தனது தனித்துவம் மிக்க குரல் வளத்தால் அனைவரையும் கவர்ந்தவர். கலை உலகில் இவரது சேவை மென்மேலும் வளரவும், இறைவன் இவருக்கு நீடித்த ஆயுளை அருளவும் வரம் வேண்டி வாழ்த்துகின்றோம்.

செபஸ்ரியன் வீதி,
பாசையூர். (68997)
**குடும்பத்தினர்.**

**ஓராண்டு நினைவுகூரல்**

மலர்வு 10 . 08 . 1946



உதிர்வு 27 . 11 . 2006

திருமதி **பவானந்தன் இராசம்**
திதி: (16.12.2007) ஸப்தமி

ஓராண்டு போனாலும் ...... அம்மா!
எம்கண்களில் அருவிகள் சொரிய ....
உன் நினைவுகளை எங்களிடம் .....
நிஜமாகத் தந்துவிட்டு ...
எங்கு சென்றாய் அம்மா .....?

நினைவில்...
குமரகோட்டம்,
கோண்டாவில். (68999)
கணவர், மகள், குடும்பத்தினர்.

**மணமகன் தேவை**

1968 இல் பிறந்த, விவாகரத்துப் பெற்ற சதய நட்சத்திரமுடைய பட்டதாரி அரச ஊழியருக்கு மணமகன் தேவை. தொடர்பு:
விளம்பர இல.3038, மே/பா. உதயன் (68996)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அரசுடன் ஒட்டியிருப்போரின் முக்கியத்துவம் குறைகின்றது

மிக நெருக்கடியான வரவு- செலவுத் திட்ட வாக்கெடுப்பில் மிக அநாசயமாக வெற்றியீட்டியிருக்கிறது மஹிந்த அரசு.

வரவு- செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பில் ஆக 16 மேலதிக வாக்குகளைப் பெற்ற அரசு அதற்குப் பின்னர் அரசிலிருந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வெளியேறிய பின்னணியில் தோல்வியைத் தழுவும் இக்கட்டில் - சிக்கலில் - இருப்பதாகவே பலரும் கருதினர்.

ஆனால் பலரும் எதிர்பாராத விதத்தில் 47 அதிகப்படியான வாக்குகள் வித்தியாசத்தில் நாடாளுமன்றத்தில் தனது யுத்த வரவு - செலவுத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிக் காட்டியிருக்கிறது அது.

யுத்தத் தீவிரத்தில் வெறி கொண்டலையும் மஹிந்தரின் அரசு, போர் முனைப்பு வரவு - செலவுத் திட்டமாகவே இதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தது.

இந்த வரவு- செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் தோற்கடிக்க விடுவது அரசின் போரியல் தீவிரத் திட்டத்திற்கு ஆப்பு வைக்கும் வேலையாகிவிடும் என பௌத்த - சிங்களப் பேரினவாத சக்திகள் கருதின. அதன் காரணமாகவே தென்னிலங்கையின் பேரினவாதக் கட்சிகள் எல்லாம் அரசியல் வேறுபாடுகளைத் தூரத் தள்ளி வைத்துவிட்டு இந்த வரவு - செலவுத் திட்டம் தங்கு தடையின்றி நிறைவேறுவதை உறுதிப்படுத்தும் வகையில் ஐக்கியமாகச் செயற்பட்டு, பௌத்த- சிங்கள ஐக்கியத்தை நிரூபித்துள்ளன.

'பயங்கரவாதத்துக்கு எதிரான போர்' என்ற பெயரில் தமிழர் தேசத்தின் மீது கொடூர யுத்தத்தைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறது கொழும்பு. அதற்கு ஒன்றுபட்டு உதவுவதன் மூலம், தமிழரின் தேசிய விடுதலைத் தாகத்தை- வேணவாவை - அடியோடு தகர்த்து, தமிழினத்தை அடக்குவதில் கங்கணம் கட்டி நிற்கிறது தென்னிலங்கை. அந்தக் கருத்தியல் போக்கின் பிரதிபலிப்பையே வரவு- செலவுத் திட்டத்தின் மீதான வாக்கெடுப்பின் போது தென்னிலங்கைக் கட்சிகள் வெளிப்படுத்தின.

புலிகளுக்கு எதிரான கடுந்தீவிரப் போரியல் நிலைப்பாடு என்ற ஒரேயொரு துரும்பை வைத்துக் கொண்டு, தமது அரசை வெற்றிகரமாகக் கொண்டு நடத்தலாம் என்று எண்ணும் கொழும்பு அரசு, அதற்கமைவாகவே தமது காய்களை நகர்த்தி வருகின்றது.

பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய அந்த யுத்தத் தீவிரப் போக்கின் விபரீதங்களை விளங்கிக் கொள்ளாத - சரிவரப்புரிந்து கொள்ளாத - தென்னிலங்கைச் சமூகமும் 'ஆஹா ஓஹோ' என்று இந்தப் போர் வெறிச் சிந்தனையைச் சிலாகித்து அதை ஆதரித்து நிற்கிறது.

இந்த வரவு - செலவுத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றியதும், அரசுத் தரப்பின் பேச்சாளரும், அரசின் பிரதம கொறடாவும், சிரேஷ்ட அமைச்சருமான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே பெரு மூச்சு விட்டபடி என்ன கூறினார்?

*''இந்த வரவு - செலவுத் திட்டம் துரதிஷ்ட வசமாகத் தோற்கடிக்கப்பட்டிருந்தால் பயங்கவாதத்திற்கு எதிராக அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் அனைத்தும் தடுத்து முடக்கப்பட்டிருக்கும். நல்லவேளை அப்படி ஏதும் நடக்கவில்லை. எனவே எமக்கு ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றி'' - என்றார் அவர்.*

சரி சிங்களக் கட்சிகளும் தென்னிலங்கைச் சக்திகளும் இதனைக் கூறித் திருப்திப்படலாம். மகிழ்ந்து கொள்ளலாம்.

ஆனால் இந்தப் போர் வெறித் தீவிர வரவு- செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்த - தமிழ் பேசும் மக்களை பிரதிநிதுத்துவப்படுத்துபவர்கள் எனத் தம்மைக் கூறிக்கொள்கின்ற - 'கோடரிக் காம்புகள்'- எதனைக் கூறித் திருப்திப்படலாம்? எப்படித் தமது மனச்சாட்சியின் கேள்விகளுக்கு அவர்கள் பதில் கூறப் போகின்றார்கள்?

நாடாளுமன்றப் பேச்சுக்களில்- ஏன், வரவு, செலவுத் திட்ட மீதான உரைகளின் போது கூட- அரசின் யுத்த தீவிரப் போக்கை தமிழர் விரோதக் கொடூரச் செயற்பாடுகளை வேறு வழியின்றி கண்டித்து, உண்மைகளை வெளிப்படுத்தும் வகையில் உரையாற்றிய இவர்கள், பின்னர் அந்த யுத்த தீவிர வரவு - செலவுத் திட்டத்தை ஆதரித்து வாக்களித்ததன் மூலம், தங்களின் அரசியல் குத்துக்கரணத்தை - சுயநலத்தை - பறைசாற்றிக் கொண்டார்கள்.

இந்தத் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளான - இக்கோடரிக் காம்புகளின் ஆதரவு இருந்தாலும், இல்லாவிட்டாலும் கூட, தென்னிலங்கை பௌத்த - சிங்கள அரசினால் பலமாகத் தாக்குப் பிடிக்க முடியும் என்பதை அரசு மேற்படி வாக்கெடுப்பு மூலம் நிரூபித்துக் காட்டியிருக்கிறது.

இந்தப் 'போடுதடி'களின் முக்கியத்துவம் இவ்வளவு தான் என்பதை இந்த வாக்கெடுப்பு அம்பலப்படுத்தியிருப்பதால், இனி அரசுக்குள் இத்தரப்பின் பட்டை கழன்று விடும். முக்கியத்துவம் இல்லாமல் மேலும் மூலைக்குள் இவர்கள் வீசப்படுவார்கள்.

ஆனால் ஒண்டிக்கொண்டு, கிடைத்ததை அள்ளுவதற்கு அலையும் கூட்டம் தன்னைத் திருத்திக் கொள்ளப் போவதில்லை. அந்தக் கூட்டம் வாலாட்டிக் கொண்டே இருக்கும் - போர்த் தீவிரப் போக் கில் முழு மூச்சாக நிற்கும் தனது எஜமான் அரசுக்கு எப்போதுமே விசுவாசமாக!

# வீட்டில் புகுந்த கோஷ்டி தாக்குதல்; ஐவர் காயம்

யாழ்ப்பாணம்.டிசெ.16

வீட்டினுள் அத்துமீறி நுழைந்த கும்பல் அங்கிருந்தோரை தாக்கியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கைக்குழந்தை உட்பட ஐவர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்றுக் காலை மந்துவில் கிழக்கில் இடம்பெற்றது. காயமடைந்தவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.


சேது ராசா பரமேஸ்வரி (வயது 34) அவரது பிள்ளைகளான சேது ராசா சாருஜா (வயது 10) சேதுராசா பவித்திரன் (வயது 8) ஆகியோர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். மற்றைய இருவரும் சாவகச்சேரி மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினர். (1-207)

# செயலமர்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.16

வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் இன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்த தரம் 7 ஆசிரியர்களுக்கான செயன்முறைப் பாடச் செயலமர்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்தார்.

இதேவேளை தரம் 11 ஆசிரி யர்களுக்கான மனைப் பொருளியல் பாட செயலமர்வு ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி நாளை திங்கட்கிழமை ஆசிரிய நிலையத்தில் நடைபெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (202)




# காணாமற்போனோர் குறித்து ஆய்வும், விழிப்புணர்வு நிகழ்வும்

யாழ்ப்பாணம்.டிசெ.16

யாழ். மாவட்டத்தில் தற்போது அதிகரித்துவரும் காணாமற்போதல் மற்றும் படுகொலைகள் குறித்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தினர் ஆய்வொன்றைச் செய்துள்ளனர்.

கடந்த 7 ஆம் திகதி அமெரிக்க உதவி மன்றத்தின் (US AID) ஆதரவுடன் மேற்படி நிலையத்தினர் யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் மனித உரிமை விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்றை நடத்தினர்.

இக்கருத்தரங்கின் போதே இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

யாழ். தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் என்.யோகராஜன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கு நிகழ்வில் நிலையத்தின் சட்ட ஆலோசகர் சட்டத்தரணி மு.றெமீடியஸ், யாழ். சமூக செயற்பாட்டு மையத்தின் இணைப்பாளர் எஸ்.சுகிர்தராஜா ஆகியோர் கருத்துரைகளை நிகழ்த்தினர்.

இந் நிகழ்வில் அமெரிக்க உதவி மன்றத்தின் உத்தியோகத்தரும் கலந்து கொண்டார்.

குடாநாட்டில் அண்மைக் காலமாக கொலை, காணமற்போதல், ஆள்கடத்தல் போன்றவை அதிகரித்துள்ளன. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைளக் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. (202)

# பருத்தித்துறை மத்திய மருந்தகத்துக்கு 20 லட்சம் ரூபா செலவில் புதிய கட்டடம்

பருத்தித்துறை,டிசெ.16

பருத்தித்துறை மத்திய மருந்தகத்தின் இரண்டாம் கட்ட நிர்மாணப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இதற்கென 20 லட்சம் ரூபா செலவிடப்படவுள்ளது.

நீர்த்தாங்கி, சுற்றுமதில் என்பவற்றை நிர்மாணிப்பதற்கென மேற்படி நிதியிலிருந்து 13.5 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வேலைகளைப் பருத்தித்துறை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் பொறுப்பேற்றுள்ளது.

பருத்தித்துறை துறைமுகத்திற்கு அண்மையில் இயங்கி வந்த இந்த மருந்தகம் யுத்த அனர்த்தங்களால் பருத்தித்துறை ஆத்தியடியில் இயங்கி வந்தது. தற்போது பருத்தித்துறை தும்பளை வீதியிலுள்ள தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கி வருகின்றது.

இம் மருந்தகத்திற்கான கட்டடம் பருத்தித்துறை தும்பளை வீதியில் சிவன் கோவிலுக்கு அருகாமையில் அமைக்கப்பட்டு வருகின்றது.

நிர்மாணப் பணிகள் பூர்த்தியானதும் மருந்தகம் புதிய கட்டடத்தில் இயங்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை -

கரவெட்டி மத்திய மருந்தகத்திற்கென 5 மில்லியன் ரூபா செலவில் புதிய கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. இம்மருந்தகத்திற்கான நீர்த்தாங்கியொன்றும் ஒரு மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்[illegible]வுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (20-218)

# அரலியில் இன்று மணிக் கோபுர கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,டிசெ.16

அராலி ஆவரம்பிட்டி முத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்தில் காண்டா மணிக்கோபுர நூதனப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11மணிக்கு நடைபெறவுள்ளது.

கும்பாஷேகக் கிரியைகள் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. (1)

# வடமராட்சியில் கால போகத்துக்கு தானிய வகைகள் விநியோகம்

வடமராட்சி.டிசெ.16

வடமராட்சிப் பிரதேசத்தில் கால போகத்தில் தானிய வகைகளைப் பயிரிடும் விவசாயிகள் தமக்குத் தேவையான தானிய வகைகளைப் புலோலி கமநல சேவை நிலையத்திலுள்ள விவசாய விரிவாக்க நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இத் தகவலை விவசாயப் போதனாசிரியர் சொ.சிவகுமாரன் தெரிவித் தார்.

கௌபி, பயறு, உழுந்து முதலான தானிய விதை இனங்கள் தேவைப்படுவோர் மேற்படி நிலையத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (202-160)

## நாளை


மார்கழி - 01 திங்கட்கிழமை 17.12.2007

| | |
|---|---|
| திதி : அட்டமி | மு.இ. 10.59 |
| நட்சத்திரம் : | பூரட்டாதி பி.ப. 04.20 |
| சுபநேரம் | : 12.22 - 01.52 |
| ராகுகாலம் | : 07.52 - 09.22 |

# தீமைக்குப் பதில் நன்மையையே செய்வதற்குப் பழகுங்கள்...

இம் மண்ணகத்தில் வாழும் நாம் ஒவ்வொருவரும், விண்ணகத்தை நோக்கியே பயணித்த வண்ணம் இருக்கின்றோம். இப் பயணம் இலகுவானது ஒன்றல்ல. மாறாக, கிறிஸ்து காட்டிய முன்மாதிரிகளை வாழ்வியலின் கண் கொண்டு அதனூடாகப் பயணிக்கும்போது அது எமக்குப் பெரும் சவால் நிறைந்ததாகவே அமைகின்றது. ஏனெனில் உலகியல் காட்டும் போக்கிற்கு முரணானதாக விண்ணகப் பயண வாழ்வு விளங்குகின்றது.

அது எவ்வாறெனில், கள்ளமற்ற அன்பையும், தீமையிலிருந்து நன்மையைப் பற்றிக்கொள்ளும் மனப்பாங்கும், எம்மைவிட மற்றவர்கள் உயர்ந்தவர்கள் என்று கருதும் உள்ளமும் கொண்டு. துன்பங்களைத் தாராள மனதுடன் தாங்கி ஆர்வமுடன் ஆண்டவருக்குப் பணிபுரியும் நிலைக்கு எம்மை முழுமையாக அர்ப்பணிப்பது ஆகும். ஆயினும் இத்தகைய வாழ்வை எல்லோரும் வாழ்தல் என்பது மிகவும் கடினமானதே. ஆனால் வாழ அழைக்கப்படுகின்றோம்.



எமது உடைமைகளைக் கைமாறு கருதாது வறுமையுற் றவர்களோடு பகிர்ந்துகொள்வதும் எம்மைத் துன்புறுத்து வோருக்கு ஆசி கூறுவதும் பிற ரது இன்ப, துன்பங்களில் பிரதி பலன் நோக்காது உதவுவதும், தாழ்மையோடு தீமைக்குப் பதில் நன்மை செய்வதும், முடிந்தவரை எல்லோரோடும் அமை தியுடன் வாழ்தலும், பொய்மையை எதிர்த்து உண்மையே உரைப்பதும் மனித வாழ்விற்குப் போராட்டம் நிறைந்ததாகவும் உலகியல் தன்மைகளில் அங்கீக ரிக்கப்படாததாகவும் விளங்குகின்றது. ஆனால் இறைவன் விரும்புவது மேற்கு றிப்பிட்ட விடயத்தினையே.

இவ்வாறான உன்னத வாழ்வையே எமது பரிசுத்த தாயாம் அன்னை மரியாள் வாழ்ந்தாள். தான் இறைமகனின் தாயாக அழைப்புப் பெறமுன்பே எப்போதும் இறைத் திட்டத்திற்குத் தாழ்மையுடன் தன் வாழ்வை அர்ப்பணித்தாள். அதன் நிமித்தமே தந்தை யாம் இறைவனுக்கு ''ஆம்'' என்ற பதிலால் தனது முழுமையான அர்ப்பணத்தைப் பல எதிரிடைகள், பழிச்சொற்கள் மத்தியிலும் துணிந்து வழங்கினாள். அதனால் இன்று விண்ணக அரசியாகவும், எம் அனைவரினதும் தாயாகவும் விளங்குகின்றாள்.

எனவே எமது கிறிஸ்தவ வாழ்வும் வெறும் கொண்டாட்டங்களையும் திருவிழாக்களையும் மேற்கொள்வதுடன் மட்டும் நின்றுவிடாது சவால்கள் மத்தியிலும் மரியன்னை யைப் போன்று எமது முழுமையான அர்ப்பணத்தை இறைவனுக்கு வழங்கி வாழ்வதி லும் இறைவார்த்தையின் படிப்பினைக்கு ஏற்ப முன்மாதிரிகையாக வாழ்வதிலும் முன்வர வேண்டும்.இன்றைய காலத்தின் அவசிய தேவையாகக் கருதப்படும் ''இயலுமான வரை அனைவரோடும் அமைதியுடன் வாழும்'' உணர்வை எம்மிலே கொண்டு வாழும்போது நாம் நீண்டகாலமாக எதிர்நோக்கிப் பயணிக்கும் அமைதி வாழ்வு வெகு தூரத்தில் இல்லை. இதற்காக முதலில் நாம் மாறுவோம். குடும்பத்தை மாற்றுவோம், சமூகத்தை மாற்றுவோம். உலகு தன்னில் மாற்றமடையும்.

(பிரான்சிஸ் அடிகளாரின் உரை ஒன்றிலிருந்து...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவத்தமிழ்ச்செல்வியின் பிறந்தநாள் அறக்கொடை நிகழ்வுகள் 2 வாரங்களுக்கு

யாழ்ப்பாணம்.டிசெ.16

சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக் குட்டியின் 83ஆவது பிறந்தநாள் அறக் கொடை நிகழ்வுகள் இம்முறை இரண்டு வாரங்களுக்கு பல்வேறு கல்விக் கொடை, வைத்தியக்கொடைகளை உள்ள டக்கிய தாக இரண்டு வாரங்களுக்கு நடை பெறவுள்ளன.

கல்விக்கொடை மற்றும் வைத்தியக் கொடை நிகழ்வுகள் இம்மாதம் 23ஆம் மிருகசீரிட நட்சத்திர நாளுடன் ஆரம்ப மாகி அவரது 83ஆவது பிறந்த நாளான எதிர்வரும் ஜனவரி 07ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெறும்.

அம்மையாரின் அறக்கொடை நிதியி லிருந்து பெறப்படும் வட்டிப்பணமும் ஏனைய சேமிப்புக் கணக்குகள் மூலம் பெறப்பட்ட வட்டியும் சுவிஸ் நாட்டிலி ருந்து அன்பர் சு.கதிர்காமநாதன் கல்விக் கொடைக்கென வழங்கிய இரண்டு லட்சம் ரூபாவும் சேர்த்து பல்வேறு வகை நிதியுத விகளாக வழங்கப்படவுள்ளதாக சிவத் தமிழ்ச்செல்வி பிறந்தநாள் அறநிதியச் சபை அறிவித்துள்ளது.

அன்னையின் பிறந்தநாளான ஜனவரி 7ஆம் திகதி நடைபெறு[illegible] அறக்கொடை விழாவில் கல்விக்கொ[illegible]யாக இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவும் வைத் தியக்கொடையாக இரண்டு லட்சம் ரூபா வும் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது. (அ)

## கெருடாவிலில் 3 செயற்றிட்டங்கள்

பருத்தித்துறை,டிசெ.16

கெருடாவில் கிராமத்தில் வட கிழக்கு மாகாண கரையோர சமுதாய அபிவிருத்தி நிறுவனம் 52 லட்சம் ரூபா செலவில் 3 செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது.

மீனவர்களுக்கான சனசமூக நிலையமும் முன்பள்ளிக் கட்டடமும் 16 லட்சம் ரூபா செலவிலும் அம்பிகை முன்பள்ளிக் கட்ட டம் 16 லட்சம் ரூபா செலவிலும் குடியேற் றத்த திட்ட ச.ச நிலையக் கட்டடம் 20 லட் சம் ரூபா செலவிலும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. (1-218)

## முஸ்லிம் காங்கிரஸில் இருந்து பிரதி அமைச்சர்கள் இருவரும் இடைநிறுத்தப்பட்டனர்

கொழும்பு,டிசெ.16

ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ் கட்சி யைச் சேர்ந்த பிரதிஅமைச்சர்களான கே. பாயிஸ்,நிஜாமுதின் ஆகியோரை கட்சியி லிருந்து இடைநிறுத்துவதென அக்கட்சி முடிவு செய்துள்ளது.

நேற்றுக் கூடிய கட்சியின் உயர்மட்டக் குழு இந்த முடிவை எடுத்தது.

இடைநிறுத்தம் தொடர்பான கடிதத்தை அவர்களுக்கு அனுப்புவது என்றும் ஏழு நாள்களுக்குள் பதில் அனுப்ப அவகாசம் வழங்குவதென்றும் முடிவு செய்யப்பட் டுள்ளது. (அ-1)

## வரவு - செலவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரவு - செலவுத் திட்டத்தில் கிடைத் வெற்றி அனைத்து மக்களின் வெற்றியாகும். இந்த வெற்றி அரசாங்கம் பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்கு உதவியாக இருக்கும்.

நாட்டின் எதிர் காலத்தைக் கருத் தில் கொண்டு அர சாங்கத்துடன் கை கோர்த்துச் செயற் படுமாறு சகல கட்சி களையும் கேட்டுக் கொள்கின்றேன். - என்றுள்ளது. (அ-1)

## க.கா. குழுவை சுருங்கச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத் தீர்வு குறித்துப் பேசுவதி லுமே அரசாங்கம் முழுக் கவனத்தையும் செலுத்தி வருகின்றது.

இதற்காகச் சிறிலங்கா அரசு தனது வரவு - செலவுத் திட்டத்தில் போருக்கு என்று மில்லாதவாறு பெருந்தொகை நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளது.

வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப் பட்ட அவ்வளவு பெரிய நிதி ஓர் இனத்தை அழிப்பதற்காக ஓர் அரசு இவ்வளவு பெரிய தொகையை ஒதுக்கீடு செய்யுமா என புரு வம் உயர்த்த வைக்கிறது.

அந்தளவுக்கு சிறிலங்கா அரசு போரின் மீது வெறிகொண்டுள்ளது.

அரசாங்கம் வன்னி மீது ஒரு பெரும் போரைத் தொடுத்து வன்னி மண்ணைக் கபளீகரம் செய்து இங்கு தனது தமிழின அழிப்பை பூர்த்திசெய்யடுவிடலாம் எனக் கருதுகிறது.

இந்த விருப்பானது மஹிந்த ராஜபக்ஷ வின் விருப்பம் மட்டுமல்ல. சிங்கள ஆட்சியாளர்கள் எல்லோருடைய விருப்ப மும் கூட இதுவே.

எமது மக்களின் எழுச்சியோடு, துணை யோடு சிங்கள தேசத்தின் இராணுவ மமதைக்கு தக்க பதில் கொடுப்போம்.

அவர்களின் கனவு ஒருபோதும் நிறை வேறப்போவதில்லை என்பதை மீண்டும் நாம் உறுதிபட நிரூபிப்போம்.

இதற்கு எமது விடுதலை இயக்கமும் எமது மக்களும் அனுமதிக்கப்போவதில்லை. மர்தன சிந்தனை(அடக்கும் சிந்தனை) என்று சொல்லக்கூடிய மஹிந்த சிந்தனை ஒரு போதும் எமது மண்ணில் நிறைவேறாது.

### அரசு கட்டவிழ்த்த போரை இணைத்தலைமை நாடுகள் தடுக்கத் தவறிவிட்டன

இணைத் தலைமை நாடுகளைப் பொறுத்தவரையில் அதில் அங்கம் பெற் றுள்ள நாடுகளை நாம் சமாதானத்தின் காவ லர்களாகவும் சமாதானத்தின் ஊக்குவிப் பாளர்களாகவுமே கருதினோம்.

ஆனால் இணைத்தலைமை நாடுகள் போர் தொடங்கியவுடன் அது குறித்து எது வுமே பேசாது மௌனத்தைக் கடைப்பிடித்தமை எமக்கும் எமது மக்களுக்கும் ஏமாற்றத்தை யும் விரக்தியையும் ஏற்படுத்தியுள்ளன.

இந்த மௌனப் போக்கிற்கு பதிலாக இந்த நாடுகள் சமாதான முயற்சிகளுக்கு மாறாக யுத்த நடவடிக்கைகளைத் தீவிரப் படுத்தும் நோக்கோடு அதற்கான தயார் படுத்தல்களில் அக்கறைகாட்டிய சிறி லங்கா அரசைத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அதனைச் செய்ய வில்லை.

அத்தோடு இந்த இணைத் தலைமை நாடுகளில் அங்கம் பெற்றுள்ள சில நாடு கள் சிறிலங்கா அரசிற்கு இராணுவ உதவி களை வழங்கிப் போருக்கு ஊக்கப்படுத் தித் தமது பொறுப்பின் நடுநிலைத் தன் மையில் சந்தேகத்தை உருவாக்கியமை யானது போருக்கும் ஆதரவு சமதானத்துக் கும் ஆதரவு என்ற ஒன்றுக்கொன்று முரண் பட்ட வகையில் செயற்படுவதானது எமக்கு நகை முரண்பாடாக உள்ளது - என்றார். (அ)

## அடம்பனில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் 26 உறுப்பி னர்கள் கொல்லப்பட்டனர் என்றும் மேலும் தெரி விக்கப்பட்டது.

முகமாலையில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற மோதலில் இரு புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர். சிப்பாய் ஒருவர் காய மடைந்தார் என்றும் மேலும் தெரிவிக்கப் பட்டது.

இவை குறித்து விடுததலைப் புலிகள் தரப்பில் இருந்து தகவல் எதுவும் கிடைக்க வில்லை. (அ-1)

## அனுராவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்த அனுரா எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்தார். எனினும் வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் வெளியேறிவிட்டார் நாடாளு மன்றத்திலிருந்து அவர் நேராக ஹொரகல்ல இல்லத்துக்குச் சென்றார் என்று தெரிவிக் கப்பட்டது. அவருக்கான அமைச்சர்களுக் கான வசதிகள், பாதுகாப்பு, அரச வாசஸ் தலம் ஆகியன வாபஸ்பெறப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது. (அ-1)

## விடுதலைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டம் வீச்சுப்பெறும். அது வன்னியின் மையத்தில் இருந்து எழுச்சி பெறும் - என்றார்.

கிளிநொச்சியில் கூட்டுவாளர் மண்டபத்தில் நேற்றுப் பிற் பகல் நினைவு நிகழ்வு நடைபெற்றது.

தேசியக் கொடியை அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றினார்.

'தேசத்தின்குரல்' அன்ரன் பாலசிங்கத்தின் திருவுருவப் படத் திற்கான ஈகச்சுடரினை தமிழீழ விடுதலைப் புலிகளின் திட்டமி டலுக்கும் மேம்பாட்டுக்குமான பொறுப் பாளர் தமிழினி, கிளிநொச்சி வலயக் கல் விப் பணிப்பாளர் த.குருகுலராஜா ஆகி யோர் ஏற்றினர்.

மலர்மாலையினை தமிழீழ வைப்பக நிதி மேலாளர் பாலகிருஸ்ணன் ஏற்றினார்.

தலைமையுரை யினை போராளி யாத்திரிகன் நிகழ்த் தினார்.

சமர் நூலாக்கப் பிரிவுப்பொறுப்பாளர் யோ.செ.யோகி நினைவுரையினை நிகழ்த்தினார்.(அ-1)

## விமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைந்துள்ள விமா னப்படை முகாமில் இருந்து புறப்பட்ட டிரக் வாகனம் விபத் துக்குள்ளான தில் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது என விமானப் படையி னர் தெரிவித்தனர்.

## பூமி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் மாநாட்டில் இந்தத் தகவல்களை கலா நிதி மொஹான் முன சிங்க கூறினார். - (அ-1)



துரித தபால்கள் பொதிகள் சேவை
X MAS
FedEx Express
லண்டனுக்கு அனுப்பப்படும் 5 Kg பொதிகளுக்கு மிகக்குறைந்த கட்டணத்தில் விசேட சலுகை 1 Kg 900/=
உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
நீங்கள் குறிப்பிடும் எந்த முகவரியிலும் ஒப்படைக்கப்படும்
உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் சில மணிநேரங்களில் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள
WESTERN UNION
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 7835 (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. தொ.பே. 021 222 7310 (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)



ICT Classes For Grade 10 & 11
Medium : English / Tamil
P.R.Najan B.Sc.
150/2, Kulapiddy Junct., K.K.S.Rd.,Kokuvil.
T.P:- 0602214294



CB Computer Academy
Station Road, Kondavil. 021-4590291
17.12.07 (Mon)
Kid's Programmes (Grade 1-9)
ICT (Grade 10 & 11)
Pascal for GIT (A/L)
விடுமுறைக் காலத்தை வீணடிக்காதீர்கள்


## மரண அறிவித்தல்

### சின்னையா சுப்பிரமணியம்

(இளைப்பாறிய ஆசிரியர், புலோலி)

நீலாவத்தை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் பெருந் தெரு, புலோலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின் னையா சுப்பிரமணியம் நேற்று (15.12.2007) சனிக்கிழமை சிவ பதமடைந்தார்.

அன்னார் சிவஞானசுந்தரியின் அன்புக் கணவரும் ஸ்ரீ ரஞ் சனி(கனடா), ஸ்ரீகாந்தினி(வலயக் கல்வி அலுவலகம், வடம ராட்சி), ஸ்ரீலதன்(கனடா), ஸ்ரீநந்தினி(கனடா), ஸ்ரீ ராஜன்(கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜேந்திரா(கனடா), மகேந் திரராஜா(தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப் பாணம்), பகீரதி(கனடா), சுதர்சன்(கனடா), தாரணி(கனடா) ஆகியோ ரின் அன்பு மாமனும் கனடாவைச் சேர்ந்த அனோஜன், அருணன், வினோதன், பிரசன்னா, சந்தோஷ், சுஜீத், விசாலி, சிவகாமி, அபிராமி, சாளிகரி, திவ்யா(மாணவி, பரு. உயர்தரப் பாடசாலை), கௌசிகா(மாணவி, வடஇந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை) ஆகியோரின் அன்புப் பேரனும் சின்னத்துரை, பாக்கியலட்சுமி, சபாரத்தினம், தங்கமணி, முருகையா(கனடா), காலஞ்சென்ற சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதர னும் புஸ்பராணி, ஸ்ரீபவனேந்திரராஜா, செல்வராணி, மதி வதனி, லோகேஸ்வரன், இராஜேஸ்வரன் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(16.12.2007) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புலோலி கரும்பம்பன் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெருந்தெரு,
புலோலி தெற்கு, புலோலி.

தகவல்:
மகேந்திராஜா
(மருமகன்)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.12.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org